# கிறிஸ்துவின் இரண்டாம் வருகை

## அஸ்திபார சத்தியம் தொகுப்பு 14

பீட்டர் டான்

© பதிப்பு உரிமை 2008 பீட்டர் டான் சுவிசேஷம். எல்லா உரிமைகளும் முன்பதிவு செய்யப்பட்டவை. பதிப்பாளரின் அனுமதியை வரிவடிவில் பெற்றாலன்றி இப்புத்தகத்தின் எந்த ஒரு பகுதியையும் பிறமொழியாக்கம் செய்யவோ, துண்டு பிரசுரம் செய்யவோ, நகல் எடுக்கவோ, அச்சிடவோ, வேறு எவ்விதத்திலும் பயன்படுத்தவோ கூடாது.

இந்தப் புத்தகத்தின் pdf நகல் ஒன்றின் விலை A$10 ஆகும். விலை கொடுத்து இப்புத்தகத்தை வாங்க முடியாதவர்கள், ஆசீர்வதிக்கப்படவும் ஆவிக்குரிய வாழ்வில் வளரவும், இதை இலவசமாக கொடுக்கிறோம். எங்களது ஊழியம் தொடர்ந்து நடைபெற, உங்களால் முடிந்த பொருளாதார உதவியை நன்கொடையாக அனுப்புங்கள்.

உங்களது நன்கொடைகளை paypal வழியாக elshaddai1@bigpond.comக்கு அனுப்புங்கள்.
வேறு எந்த வழியிலும் உங்களது நன்கொடைகளை அனுப்ப தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:


Peter Tan Evangelism
PO Box 27
Belconnen
ACT 2616, Australia.

Tel.: 00614 17755613
Email: elshaddai1@bigpond.com


*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.* 

# முகவுரை

அஸ்திபார சத்திய தொடர் தொகுப்புகளின் கடைசி புத்தகம்தான் இது. இந்தத் தொடர் தொகுப்புகளிலே எபிரெயர் 6:1–2ல் வகைப்படுத்தப்பட்டுள்ள அஸ்திபார கொள்கைகளை சேர்த்திருக்கிறோம்: செத்த கிரியைகளிலிருந்து மனந்திரும்புதல், தேவன் மேல் வைக்கும் விசுவாசம், ஸ்நானங்ககளுக்கடுத்த உபதேசம், கைகளை வைக்குதல், மரித்தோரின் உயிர்த் தெழுதல் மற்றும் நித்திய நியாயத்தீர்ப்பு. மரித்தோரின் உயிர்த்தெழுதல் மற்றும் நித்திய நியாயத்தீர்ப்பை விளங்கிக்கொள்ளுதல் ஆகியவைகளை உள்ளடக்கிய, கடைசிகால சம்பவங்களைப் பற்றிய உபதேசத்தின் அடிப்படைக் கொள்கைகள், இந்தப் புத்தகத்திலே விளக்கிக் காட்டப்பட்டு இருக்கின்றன.

கர்த்தருடைய வருகையைப் பற்றிய அநேக பொய்யான முன் அறிவித்தல்களை, நவீன கிறிஸ்தவம் கண்டிருக்கிறது. எழுப்புதலின் பல்வேறு வகையான அலைகளினாலும் அல்லது மனித வரலாற்றில் கூர்ந்து கவனித்து கண்டுபிடிக்கப்பட்ட கணக்கியல் முறைமையின்படி சரியாகப் பொருத்தும் சில காலக்கிரம அட்டவணை நாட்களினாலும் விசுவாசிகள் பரவச மடையும்பொழுது, இப்படிப்பட்ட தவறுகள் தொடருவதை இன்னும் அதிகமாக காண நேரிடும். உறுதியாக நிலைபெற்ற கிறிஸ்தவர்கள், கடந்தகால பொய்யான தீர்க்கதரிசனங்களின் தவறை இனம் கண்டு கொண்டு, எழுதப்பட்ட தேவ வார்த்தையிலுள்ள கொள்கைகளில் தொடர்ந்து வேறூன்றி இருப்பார்கள் என்று நம்பப்படுகிறது: கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் நேரத்தையோ நாளையோ ஒருவரும் அறியார்கள் (மத். 25:13). அவரது வருகையின் மிகச்சரியான நாளை முன் அறிவிக்க முயற்சிப்பதற்குப் பதிலாக, வெறுமனே அவருடைய வருகைக்கு நாம் ஆயத்தமாக வாழ வேண்டும்.

தங்களது தலைமுறையில் அந்திக்கிறிஸ்து யார் என்று அடையாளங்கண்டுகொள்ளும் முயற்சிதான், நவீன கிறிஸ்தவத்தில் உள்ள அடிக்கடி நடைபெறும் மற்றுமொரு தவறாகும். வெளிப்படுத்தின விசேஷம் 13ஆம் அதிகாரத்தில் உள்ள மிருகத்திலிருந்து வித்தியாசமான, எல்லா யுகங்களிலும் கிரியை செய்யும் அந்திக்கிறிஸ்துவின் ஆவியும் உண்டென்பதை, அப்படிச் செய்கிறவர்கள் மறந்துவிடுகின்றனர் (1 யோவா. 4:3; வெளி. 13:18). இப்படிப்பட்ட அவசரமான அடையாளங்காணுதல், விசேஷமாக இப்படி அடையாளங்காணப்பட்ட அந்திக் கிறிஸ்து, வேதாகம தீர்க்கதரிசனத்தை நிறைவேற்றாமல் மரித்துவிடும்பொழுது, திருச்சபைக்கு அடிக்கடி கனவீனத்தைக் கொண்டு வந்துள்ளது.

பொய்யான முன் அறிவித்தல்கள் மற்றும் தவறாக வழிநடத்தப்பட்டுள்ள கடைசிகால உபதேசங்களினால், தெளிவில்லாமல் கலங்கிப்போயிருக்கும் இந்தப் பகுதியில், இந்தப் புத்தகம் அஸ்திபாரக் கொள்கைகளைச் சரியாகப் போடும்படி நாடுகிறது. கடைசிகாலங்களை யும் கிறிஸ்துவ கடைசிகால சம்பவங்களைப் பற்றிய போதனைகளையும் இவைகளைக் கொண்டு அணுகி படிக்க வேண்டும்.

சமாதானத்தின் தேவன்தாமே நம்மை முழுவதுமாக முற்றிலும் பரிசுத்தமாக்குவாராக. நமது ஆண்டவராகிய இயேசுவின் வருகையிலே நமது முழு ஆவிகள், ஆத்துமாக்கள், சரீரங்கள் குற்றமற்றதாக காக்கப்படுவதாக (1 தெச. 5:23).

பாஸ்டர் ***பீட்டர் டான்***

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.*

## அத்தியாயம் 1

# பல்வேறு வகையான கடைசிகால சம்பவங்களைப் பற்றிய உபதேசங்களின் கருத்துக்களை விளங்கிக்கொள்ளுதல்

*'Eschatology'* கடைசிகால சம்பவங்களை பற்றிய உபதேசம் என்ற வார்த்தை *'eschatos'* என்ற கிரேக்க வார்த்தையிலிருந்து வந்துள்ளது. அதன் பொருள் 'கடைசிகால சம்பவங்கள்' என்பதாகும். அதை கடைசிகால உபதேசம் என்றோ அல்லது eschatology என்றோ நாம் அழைத்தாலும், பல்வேறு வகையான கருத்துக்களை முன்வைக்கும்போது, நாம் எழுதப்பட்ட தேவ வார்த்தையின் எல்லைகளுக்குள் இருக்கும் வரை, அது எந்த ஒரு வித்தியாசத்தையும் உண்டாக்குவதில்லை. கடைசிகால உபதேசத்தின் பல்வேறு பகுதிகளைப் பற்றி ஒருவர் ஆராய்ந்து கண்டு பிடிக்க ஆரம்பிக்கும்போது, அவர் சந்திக்கும் முதற்காரியமே, கிறிஸ்துவின் இரண்டாம் வருகை, உபத்திரவகாலம், ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்படுதல், ஆயிரம் வருட அரசாட்சி இவைகளின் பல்வேறுவகையான கருத்துக்களாகும்.

கீழ்காணும் சில வார்த்தைகள் பயன்படுத்தப்படுகின்றன:

| | | |
|---|---|---|
| *உபத்திரவகாலம்* | – | தானியேல் தீர்க்கதரிசனமாக சொன்ன ஏழு வருடகாலம் (தானி. 9:27). |
| *முன்–உபத்திரவகாலம்* | – | உபத்திரவகாலத்திற்கு முந்தினது |
| *மத்திய–உபத்திரவகாலம்* | – | உபத்திரவகாலத்தின் மத்தியில் |
| *பின்–உபத்திரவகாலம்* | – | உபத்திரவகாலத்திற்கு பிந்தினது |
| *ஆயிரம் வருடம்* | – | வெளி. 20:5–7ல் உள்ள கிறிஸ்துவின் ஆயிரம் வருட அரசாட்சி |
| *முன் ஆயிரம் வருடம்* | – | ஆயிரம் வருடத்திற்கு முன்பு |
| *பின் ஆயிரம் வருடம்* | – | ஆயிரம் வருடத்திற்குப் பின்பு |
| *ஆயிரம் வருடமின்மை* | – | ஆயிரம் வருடகாலம் இல்லை (1000 வருடத்தை உருவக மொழியாக நோக்குதல்) |

*ஆகாயத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுதல்* – திருச்சபை இரகசியமாக எடுத்துக்கொள்ளப் படுதல் (1 கொரி. 15:51–54; 1 தெச. 4:17; 2 தெச. 2:1)

இவைகள் ஒவ்வொன்றின் விவரங்களுக்குள் போகு முன்பு, இந்த பலவேறு வகையான கருத்துக்களுக்கான காரணத்தை முதலாவதாக குறிப்பிடுவது அவசியமாகிறது. பல்வேறு வகையான எல்லா கருத்துக்களும், தங்களுக்கு வேதவாக்கிய அடிப்படையை கொண்டுள்ளன. இந்த கருத்துக்கள் எவ்வாறு வந்தன என்பதை நாம் விளங்கிக்கொள்வது அவசியமாகிறது.

*மாறுபட்ட வகைப்படுத்துதல் மாறுபட்ட கருத்துக்கள்*

இரண்டாவது வருகையைப் பற்றிய பல்வேறு வகையான எல்லா வேதவசனப்பகுதி களையும் எடுத்துக்கொண்டால், உதாரணமாக மத்தேயு 24–25 அதிகாரங்கள், மாற்கு 13ஆம் அதிகாரம், லூக்கா 21ஆம் அதிகாரம், 1 கொரிந்தியர் 15ஆம் அதிகாரம், 1 தெசலோனிக் கேயர் 4–5 அதிகாரங்கள், 2 தெசலோனிக்கேயர் 1–2 அதிகாரங்கள், 1 தீமோத்தேயு 4ஆம் அதிகாரம், 2 தீமோத்தேயு 3ஆம் அதிகாரம், சகரியா 14ஆம் அதிகாரம், மற்றும் வெளிப்படுத் தினவிசேஷம் 19ஆம் அதிகாரம், இவைகளைப் பின்வருமாறு நாம் வகைப்படுத்துகிறோம்:

1. <u>ஒரே ஒரு</u> ஒட்டுமொத்தமான கிறிஸ்துவின் இரண்டாம் வருகை – காரணகாரியம் நாம் பின்–உபத்திரவகால கருத்தை ஏற்றுக்கொள்கிறோம் என காரணகாரியம் அதிகாரத்தோடு சொல் லும். ஏனெனில் இயேசுவின் இரண்டாம் வருகை உபத்திரவ காலத்திற்குப் <u>பிறகு</u> (பின் உபத் திரவ கால கருத்து) நடைபெறும் என்பது சுவிசேஷ விவர வர்ணனைகளிலிருந்து மிகவும் தெளிவாகிறது.

2. கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் <u>இரண்டு–பகுதி</u> உள்ளன: ஒன்று திருச்சபைக்கு (ஆகாயத்திற்கு எடுத்தக்கொள்ளப்படுதல் அல்லது இரகசிய இரண்டாவது வருகை) மற்றும் ஒன்று யூதர்களுக்கு (ஒலிவ மலையின் மேல் வந்து இறங்குதல் – சக. 14:4).

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.

இவைகளுக்கு இடையில் ஒரு தெளிவான யுக பிரிவு, அப்படியென்றால் அது உபத்திரவகாலத்திற்கு முன்பு தான் இருக்க வேண்டுமென காரணகாரியம் அதிகாரத்தோடு சொல்லும் (முன்–உபத்திரவ கருத்து).

3. இரண்டு–பகுதி இரண்டாம் வருகை இருக்கிறது. ஆனால், புறஜாதிகளுக்கான யுகம் மற்றும் யூதர்களுக்கான யுகம் இவைகளுக்கிடையில் தெளிவான வேறுபாடு இல்லை. திருச்சபைக்கும் யூதர்களுக்குமான இருவருக்கும் விடுதலை யின் தொடர்ச்சியை விளங்கிக்கொள்ளுதலை வெளிக்கொண்டு வருவதில் மிகவும் உறுதியான மத்திய உபத்திரவகால கருத்தை காரணகாரியம் அதிகாரத்தோடு சொல்லும்.

மேற்குறிப்பிட்டுள்ள காரணகாரிய எண்ண ஒருமைப்பாட்டிலிருந்து நீங்கள் பார்க்கும்போது, எப்பொழுது இரண்டாம் வருகை நடைபெறும் என்பதின் பல்வேறுவகையான கருத்துக்களின் பிரச்சனை, அவைகள் வேதவாக்கியங்களின்படியானதா அல்லது இல்லையா என்பது அல்ல; மாறாக, இரண்டாவது வருகையைப் பற்றி வேதவாக்கிய பகுதிகள் எவ்வாறு வகைப்படுத்தப் படுகின்றன என்பதில்தான் பிரச்சனை இருக்கிறது. எல்லாக் கருத்துக்களும் வேத வாக்கியங்களின் படியானவைகளே; அந்த வேதவாக்கியங்கள் எவ்வாறு வியாக்கியானப் படுத்தப்பட்டு வகைப்படுத்தப்படுகின்றன என்பதில்தான், அதே வேதவாக்கியங்கள் பல்வேறு கருத்துக்களை ஆதரிப்பது இருக்கிறது. பின்–உபத்திரவ கருத்திற்கு ஒரே ஒரு ஒட்டு மொத்த இரண்டாம் வருகை இருப்பதால், இரண்டு–பகுதி இரண்டாம் வருகையாக உண்டாக்க ஏன் வித்தியாசம் இருக்கிறது என்று விவரிக்க, மற்ற இரண்டு கருத்துக் களுக்கு இருப்பதுபோல இதற்கு அவசியமில்லை. இவ்வாறு இரண்டு–பகுதி இரண்டாம் வருகைக்குப் பின்னால் உள்ள காரண அறிவையும் எவ்வாறு மற்ற கருத்துக்கள் உண்டாயின என்பதையும் நாம் நோக்குவோம். (இந்த இடத்தில், நான் முன்–உபத்திரவ கருத்திற்கு நேராய் சாய்ந்து இருந்து, கிறிஸ்துவின் ஆயிரம் வருட அரசாட்சியைப் பற்றி மற்றும் முன்–ஆயிர வருட கருத்தைப் பற்றி இருப்பதையும் இதை வாசிக்கிறவர் அறிந்து கொள்ள அனுமதிப்பது அவசியமாகிறது – எனவே ஒருவேலை ஏதாவது தப்பான அபிப்பிராயம் எனது விவாதத்திற்கு சாயம் பூசுமென்றால், இதை வாசிக்கிறவர் விழிப்புணர்வடைய முடியும்).

*இரண்டு-பகுதியான கிறிஸ்துவின் இரண்டாம் வருகை*

புறஜாதியாரின் காலத்தைக் குறிக்கும் வேதாகம வசனங்கள் உள்ளன. அது யூத யுகத்தில் இருந்து புறஜாதி யுகத்தை வித்தியாசப்படுத்தியது. அப். 15ல் எருசலேம் ஆலோசனை சங்கம், புறஜாதி கேள்வியை ஆலோசிக்கக் கூடினார்கள். தேவன் (இந்த சபையின் காலத்தில்) இப்பொழுது புறஜாதியாரை சந்தித்து, அவருடைய நாமத்திற்காக ஒரு ஜனத்தை பிரித்தெடுத்து, ஒரு நாளில் தாவீதின் கூடாரத்தை (யூத ராஜ்யத்தை குறிக்கும்) சீர்படுத்த திரும்பிவருவார் என அதில் முடிவு செய்தார்கள் (அப். 15:14–16). புறஜாதியாரின் காலத்தை யும் அதன் நிறைவேறுதலையும் குறித்து இயேசு பேசினார் (லூக். 21:24). புறஜாதியாரின் நிறைவு உண்டாகும் வரையில், யூதர்கள் புறக்கணிக்கப்படுகிறதையும் புறஜாதிகளின் இரட்சிப் பையும் பற்றி பவுல் பேசினார் (ரோம. 9:24–28; 11:15–25).

இயேசுவின் முதலாம் வருகையிலே, சுவிசேஷமானது முதலாவது யூதர்களுக்கும், பிறகு புறஜாதியாருக்கும் பிரசங்கிக்கப்பட்டது (ரோம. 1:16; 2:9–10). தனது பூலோக ஊழிய காலத்திலே, புறஜாதிகளுக்கல்ல, முதலாவது யூதர்களுக்கேதான் வந்ததாக இயேசுவே தெளிவுபடுத்தினார் (மத். 10:5–6; 15:24; யோவா. 4:22). யூதர்களுக்கு தனது சாட்சியை முடித்துக் கொண்ட பிறகு, முழு உலகத்தின் பாவத்திற்கும் சிலுவையிலே மரித்து, முழு உலகத்திற்கும் சென்று எல்லா சிருஷ்டிகளுக்கும் எல்லா தேசங்களுக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி, இயேசு தனது சீஷர்களுக்குக் கட்டளையிட்டார் (மத். 28:19–20; மாற். 16:15). இயேசுவுக்கு இரண்டு–பகுதி முதல் வருகை இருந்தது என்று நாம் சொல்ல முடியும்: பிரதானமாக அவரது முதல் மூன்று ஆண்டுகள் யூதர்தகளுக்கும் அவரது உயிர்த்தெழு தலுக்குப் பிறகு அவரது ஊழியம் புறஜாதிகளை உள்ளடக்கும் முழு உலகத்திற்கும் இருந்தது. அப்படியென்றால் அவரது இரண்டு–பகுதி முதலாவது வருகையின் ஏறக்குறைய மூன்று ஆண்டு ஊழயத்திலே ஒன்று யூதர்களுடைய யுகத்திற்கும்

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved. 

(இது அவர் வளர்ச்சியடைந்த முப்பது ஆண்டுகளையும் மற்றும் மூன்று ஆண்டு ஊழியத்தையும் உள்ளடக்கும்) அவரது உயிர்த்தெழுதலுக்குப் பிறகு புறஜாதியாரின் யுகத்திற்கும் இடையே பிரிவு உண்டாயிருந்ததை விளக்கும்.

அவரது இரண்டாவது வருகையிலே, அதை இரண்டு–பகுதி இரண்டாவது வருகை என்று பிரிப்பதற்கு முடியும்: முதலாவது பகுதி புறஜாதிகளுக்கு (ஆகாயத்தில் எடுத்தக்கொள்ளப் படுதல்: மத்திய ஆகாயத்தில் வருதல் 1 தெச. 4:16–17). யூதர்களின் இரண்டாவது பகுதி (அவரது பாதம் ஒலிவ மலையின்மேல் வருதல் – சக. 14:4). தானியேலின் கடைசி வாரத்தை, அது ஆரம்பமாவதற்கு முன்பே நடக்கும், ஆகாயத்தில் எடுத்தக்கொள்ளப் படுவதோடு யூதர் யுகமாக நாம் அதை எடுத்துக்கொண்டால், பிறகு இரண்டு பகுதி இரண்டாம் வருகைக்கு இடையே ஏழுவருட பிரிவு உண்டாகும். யூதர்களுக்கு அவரது வருகையை சபைக்கு அவர் தனியாக வருவதற்கு எதிரானதாக எடுத்தக்கொள்பவர்கள் (ஒலிவ மலையின்மேல் அவரது பாதங்கள் வந்து இறங்குவது) 1 தெசலோனிக்கேயர் மற்றும் 2 தெசலோனிக்கேயர் வேத பகுதிகளை மத்திய ஆகாயத்தில் ஆண்டவரது இரகசிய வருகையின் வெளிப்பாடாகவே காண்கின்றனர் (1 தெச. 4:15–17; 2 தெச. 2:1).

*ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்படுதல்: ஆகாயத்தில் இரண்டாவது வருகையின் முதல்-பகுதி*

ஒன்று புறஜாதிகளுக்கும் ஒன்று யூதர்களுக்குமாக, கர்த்தரின் இரண்டாவது வருகையை இரண்டு பகுதிகளாக பிரித்தால், வேதத்திலுள்ள இரண்டாவது வருகையின் வேதவாக்கியங்களை, மிகவும் கவனமாக நாம் ஆராய்ந்து பார்ப்பது, அவசியமாகிறதென்பது தான் அதன் பொருள். மத்திய ஆகாயத்தில் அவர் வரும் முதலாவது வருகையை, சில வேத பகுதிகள் குறிக்கலாம், சில பகுதிகள் உலகத்திற்கு வரும் அவரது இரண்டாவது வருகையை குறிக்கலாம். எடுத்துக்கொள்ளப்படுதலில் அவரது வருகை புறஜாதிகளுக்குத் தான் என்பது மத்திய ஆகயத்தில் அவர்களுக்கான இரண்டாவது வருகை என்றால், அது இறையியலின்படி சரியானதாகாது; அவ்விதமே, ஒலிவமலையில் இறங்கும் யூதர்களுக்கான அவரது இரண்டாவது வருகையும் அவர்களுக்கான அவரது இரண்டாவது வருகை என்றாலும் இறையியலின்படி சரியானதாகாது. இவ்வாறு, இரண்டு – பகுதியான இரண்டாம் வருகை என்ற ஒரு புதிய வார்த்தையை உருவாக்குகிறோம்.

வானத்திலே எடுத்துக்கொள்ளப்படுதல் அல்லது இரண்டாம் வருகையில் ஆகாயத்திலே எடுத்துக்கொள்ளப்படுதலில் என்ன அடங்கியுள்ளது? இது விசுவாசிகளை அவரிடத்தில் ஒன்றாக சேர்ப்பதோடு, திருச்சபையின் யுகம் முழுமையடையும் என்பதையும் குறிக்கும் (2 தெச. 2:1). 'இரண்டாம் வருகையில் ஆகாயத்தில்' என்ற சொற்றொடர் 1 தெச லோனிக்கேயர் 4:17லிருந்து வந்துள்ளது. அங்கு, சத்தத்தோடே கர்த்தர் வானத்திலிருந்து இறங்கி வரும்வதும் கூறப்பட்டுள்ளது, கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் எழுந்திருப்பார்கள, உயிரோடு இருக்கிறவர்கள் அவர்களோடு ஆகாயத்திலே தேவனை சந்திக்க மேகங்களுடனே எடுத்து கொள்ளப்படுவார்கள் அதே நிகழ்வு 1 கொரிந்தியர் 15:51–52ல் விவரிக்கப்பட்டுள்ளது. அங்கு மரித்தோர் உயிரோடு எழுப்பப்படுவார்கள், தங்களது புதிய ஆவிக்குரிய சரீரங்களைப் பெற்றுக்கொள்ள, இமைப்பொழுதிலே உயிரோடிருக்கிறவர்கள் மறுரூபமாக்கப்படுவார்கள்.

தேவனோடு நடந்து காணப்படாமற்போன ஏனோக்கு, ஆகாயத்திலே எடுத்துக்கொள்ளப் படுவதற்கு அடையாளமாயிருக்கிறார். அது ஆகாயத்திலே இரண்டாம் வருகையில் நடை பெறவேண்டும் (எபி. 11:5 – அவர் எடுத்துக்கொள்ளப்பட்டார் Greek root from *metatithemi* meaning *to transport or be carried, includes transmutation* எடுத்துச்செல்லப்படுதல் அல்லது கொண்டு செல்லுதல் என்று பொருள்படும் மெடாடிதிமி என்ற கிரேக்க மூல வார்த்தையில் இருந்து வருகிறது, மாற்றங்களுக்கு அப்பாற்பட்டது என்பதையும் உள்ளடக்கும்). ஆகாயத் திலே இந்த இரண்டாம் வருகை என்பது சிலநேரங்களிலே இரகசிய வருகை அல்லது ஆகாயத்திலே எடுத்துக்கொள்ளப்படுதல் (Rapture) என்றும் அழைக்கப்படுகின்றது.

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.* 

ஏனெனில், இரவிலே திருடன் வருகிறவிதமாய் இந்த நிகழ்ச்சி இருக்கும் என்பதால், இவ்வாறு அர்த்தங்கொள்ளப்படுகிறது (1 தெச. 5:2; 2 பேது. 3:10). இது ஒலிவமலையின் மேல் நமது ஆண்டவர் இறங்குவது, எல்லாரும் காணக்கூடிய ஒன்றாகையால் (மத். 24:27 – கிழக்கிலிருந்து மேற்கு வரையும் மின்னலடிக்கிறதைப்போல்) வித்தியாசமானது. மெய்யாகவே, ஒலிவமலையின்மேல் இறங்குவது – யூதர்களுக்கான இரண்டாம் வருகை – இரகசியமான நிகழ்ச்சியாக இருக்காது.

ஆகாயத்திலே எடுத்துக்கொள்ளப்படுதல் நடைபெறும்போது, அது இரண்டாவது முறையாக மரித்தோர் அதிகமாக உயிரோடு எழுவது நடைபெறும். முதலாவது சரீர உயிர்த்தெழுதல் (வெறும் சரீர உயிர்த்தெழுதல் மட்டுமல்ல, ஆனால், அழிவில்லாத ஆவிக்குரிய சரீரத்திற்கு சரீர உயிர்த்தெழுதல்) இயேசு மரித்தோரிலிருந்து எழுந்தபோது நடைபெற்றது. அவர் எழுந்த போது, பழைய ஏற்பாட்டுக் காலத்திலே பாதாளத்திலே அவருக்காக காத்துக்கொண்டிருந்த எல்லாரும் (ஆபிரகாமின் மடி லூக். 16:19–31), அவரோடு எழுந்து, தங்களது ஆவிக்குரிய சரீரங்களைப் பெற்றுக்கொண்டார்கள் (மத். 27:52–53). பாதாளத்திலே 'ஆபிரகாமின் பகுதிப் பிரிவை' இயேசு எழுத்தின்படியே காலிசெய்துவிட்டார். மரணத்தின் காவலில் இருந்தவர்களை, அவரோடு பரலோக பரதீசுக்கு எடுத்துச் சென்றுவிட்டார் (எபே. 4:8–10). மரித்தோரிலிருந்து எழுந்திருக்கப்போகிற இவர்கள், முதற்பலன்களைப் போன்றவர்களாக இருக்கிறார்கள் (1 கொரி. 15:20–23).

மரித்தோரிலிருந்து எழும் இரண்டாவது இன்னுமொரு பெருங்கூட்டம், மத்திய ஆகாயத்தில் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் இருக்கும் (1 கொரி. 15:23, 52; 1 தெச. 4:16, 17). இந்த நிகழ்ச்சிக்கு முன்பு, கிறிஸ்துவுக்குள் மரிக்கும் ஒவ்வொருவரும், பரலோகத்திலே கர்த்தருடைய பிரசன்னத்திலே இருப்பார்கள். ஆனால் அவர்கள் புதிய உயிரோடு எழும்பின அழியாத சரீரங்கள் இல்லாமல் இருப்பார்கள்; அவர்களது ஆவிகளும் ஆத்துமாக்களும் பரலோகத்தில் இருக்கும். இரத்த சாட்சியாக ஸ்தேவான் மரித்தபோது, அவரது ஆவியை ஆண்டவர் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டார் (அப். 7:56–60). சரீரத்திலில்லாமலிருப்பது (மரிப்பது) கிறிஸ்துவோடு இருப்பதாகும் (பிலி. 1:21–24). 'ஆத்தும–தூக்கம்' என்று ஒன்று மில்லை. ஆவிக்குரிய ஆத்தும உணர்வுத்தன்மை என்பது, சரீரமரணத்திற்குப் பிறகு ஆவிக்குரிய உலகில் தொடர்ந்து இருக்கும்.

ஆவிகளாகவும் ஆத்துமாக்களாகவும் நாம் வாழ்ந்து வளரும்பொழுது, நமக்கு ஏன் ஒரு சரீரம் அவசியம்? என்ற கேள்வி சில நேரங்களில் கேட்கப்படுகிறது. இன்னும் நாம் பூரண மாய் அறிந்து கொள்ளாத தேவனுடைய திட்டங்கள் இருக்கின்றன. அவைகளுக்காக நமக்கு புதிய ஆவிக்குரிய சரீரங்கள் அவசியமாகின்றன. அந்த சரீரங்கள் புதிய வானத்திற்கும் புதிய பூமிக்கும் ஆயத்தமாயிருக்கும் (வெளி. 21:1). பரலோக பொருளினால் உண்டான இயேசுவின் உயிர்த்தெழுந்திருந்த சரீரத்தைப்போல, புதிய ஆவிக்குரிய சரீரமானது அழிவில்லாததாய் இருக்கும் (1 கொரி. 15:48–54).

*யூதர்களுக்கான இரண்டு-பகுதி இரண்டாம் வருகை: ஒலிவமலையின்மேல் இறங்குதல்*

இந்த இரண்டு–பகுதி இரண்டாம் வருகை, தானியேல் தீர்க்கதரிசனமாய் உரைத்தபடி, உபத்திரவ வார முடிவில் நிச்சயமாகவே நடைபெறும் (மகா உபத்திரவமாகிய ஏழு ஆண்டுகள்). தானியேல் தீர்க்கதரிசனத்தின் *பாழாக்குகிற அருவருப்பைக்* குறித்து இயேசு பேசினார் (மத். 24:15). உபத்திரவவாரத்தின் மத்திய பகுதியிலே *பாழாக்குகிற அருவருப்பு* உண்*டாகும்* என்பது தானியேல் புத்தகத்திலிருந்து தெளிவாகிறது. அதன் பொருள் என்ன வெனில், ஏழு ஆண்டு உபத்திரவகாலம், இரண்டு மூன்றரை ஆண்டுகளாகப் பிரிக்கப்படுவதே (தானி. 9:27). *பாழாக்குகிற அருவருப்பை* யூதேயாவிலுள்ளவர்கள் காணும்போது, மலை களுக்கு ஓடிப்போகும்படி இயேசு சொல்கிறார். ஏனெனில் நடைபெறும் உபத்திரவம் மிகவும் கொடியதாய் இருக்கும் (மத். 24:15–21). மிகுந்த உபத்திரவம் உண்டாயிருக்கும்.

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved. 

நாட்கள் குறைக்கப்படாதிருந்தால் ஒருவரும் தப்பிப்போவதில்லை (மத். 24:22 *தெரிந்து கொள்ளப்பட்டவர்களினிமித்தமோ அந்த நாட்கள் குறைக்கப்படும்)* உடனடியாக மகா உபத் திரவத்திற்குப் பிறகு இப்பிரபஞ்ச வல்லமைகள் அசைக்கப்படும். அப்பொழுது இயேசு மகிமை யோடும் மிகுந்த வல்லமையோடும் வானத்தின் மேகங்கள் மேல் வருவார் (மத். 24:29–30).

இரண்டாம்–பகுதி இரண்டாம் வருகையானது பகிரங்க நிகழ்ச்சியாகும். தமது மகிமையின் பிரசன்னத்தினால் துன்மார்க்கரைப் பட்சிக்கும் சர்வலோக நீதிபதியாய் இயேசு வருவார் (2 தெச. 1:7–10). இந்த பகிரங்க இரண்டாவது வருகையில், கர்த்தர் ஒலிவ மலையிலே இறங்கி, பாவ மனிதனாகிய அந்திக்கிறிஸ்துவையும், உலகின் எல்லா தேசங்களையும் எதிர்த்து சந்திப்பார் (சக. 14:1–5: 2 தெச. 2:3–8). இந்த இரண்டாம் வருகைதான், ஆதாமின் யுகத்தை முடிவுக்கு கொண்டு வந்து, ஆயிரவருடத்தில் அழைத்துச் செல்லும் (வெளி. 19:11 – 20:4). இயேசு ஏசா. 61:1–2ஐ வாசிக்கையில், அவர் வாக்கியத்தின் மத்தியில் (லூக். 4:18–19) உள்ள 'அநுக்கிரக வருஷம்' என்ற இடத்தில் நிறுத்தியது, கவனத்தை ஈர்ப்பதாக உள்ளது. அதே வசனத்தின் இரண்டாம் பகுதி 'கர்த்தருடைய நீதி சரிக்கட்டும் நாளைப்' பற்றி பேசுகிறது. அது நேரடியாக இரண்டாம்–பகுதி இரண்டாம் வருகையைக் குறிக்கிறது.

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.* 

## *அத்தியாயம் 2*

# கர்த்தருடைய நியாயத்தீர்ப்புகள்

நமது கிறிஸ்தவ வாழ்விலே நாமெல்லாரும் அனுபவித்த பல்வேறு வகை அனுபவங்களான, சுத்திகரிக்கப்படுதலும் நியாயத்தீர்ப்புகளும் உள்ளன. ஆனால், வேதம் கூறுகின்ற விசேஷ நியாயத்தீர்ப்பு நிகழ்ச்சியைவிட, அவைகள் வேறுபட்டவைகள். கிறிஸ்தவ வாழ்விலே எது தவறானது மற்றும் எது சரியானது, எது சட்டப்பூர்வமானது எது வசதியானது என்பவை களில் சாதாரண நியாயத்தீர்ப்பை ஒருவர் எடுத்துத்தான் ஆகவேண்டும் (எபி. 5:14; 1 கொரி. 6:12; 10:23). ஆவிக்குரிய மனிதன் எல்லாவற்றையும் நியாயந்தீர்க்கிறான், ஆனால் அவன் ஒருவராலும் நியாயந்தீர்க்கப்பட்டான் (1 கொரி. 2:15). அப்படியென்றால் ஆவிக்குரியவன் பெருமையினால் நிரம்பியிருப்பதல்ல. ஆனால், உண்மையான ஆவிக்குரிய தன்மையென்பது, தாழ்மையும் சாந்தமும், ஏற்கனவே கர்த்தால் சிட்சிக்கப்பட்ட நிலையுமாகும் (1 கொரி. 11:31–32). காரியங்களை நியாயந்தீர்ப்பதற்கும், மக்களை நியாயந்தீர்ப்பதற்கும் மென்மையான வித்தியாசம் உள்ளது. அவைகளின் முன்னேற்றத்திற்காக நாம் காரியங்களை நியாயந்தீர்க்க வேண்டும் (நிகழ்ச்சிகள், நடைமுறைகள் உபதேசங்கள், முறைகளின் இயல்கள், செயல்பாடுள்ள முதலியன) ஜனங்களை நாம் நியாயந்தீர்க்கக்கூடாது, அது ஆக்கினைத் தீர்ப்பை உள்ளடக்கும்; அப்படிப்பட்ட நியாயத்தீர்ப்புகள் கர்த்தருக்கு உரியவைகள், நமக்குரியவைகளல்ல (ரோம. 14:4–10).

*விசுவாசிகளின் நியாயத்தீர்ப்பு*

நாம் எல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக நிற்க வேண்டும் (ரோம. 14:10). ஆவிக்குரிய உலகத்தில் அனுபவம் பெற்றவர்கள், மாம்ச சரீரத்தை விட்டு ஆவிக்குரிய உலகத்தில் நுழையும்போது, பல நேரங்களில் 'வாழ்வை–உற்று நோக்கி ஆராயும்' அனுபவங் களை அனுபவிப்பதை கவனிப்பார்கள். இந்த வாழ்வை–உற்றுநோக்கி ஆராய்வது, அதிகப் படியான 'சுய–நியாயத்தீர்ப்பை' ஒருவர் அவரது வாழ்வின் எல்லா நேர்மறை மற்றும் எதிர் மறையானவைகளை அனுபவிப்பதாகும்; ஒருவர் மற்றொருவருக்கு உண்டாக்கும் மனக்காயங் களையோ இன்பத்தையோ ஆழமாக உணர்வதாகும். இது வாழ்வை மறுமலர்ச்சியாக்கும் அனு பவமாகவும், ஒருவரை அதிகமான ஞானத்திற்கும் விளங்கிக் கொள்ளுதலுக்கும் கொண்டு வந்தாலும், இது 'கிறிஸ்துவின் நியாயாசனம்' என்று அழைக்கப்படும் நிகழ்ச்சி அல்ல.

கிறிஸ்துவின் நியாயாசனத்திலே நமது தனிப்பட்ட வாழ்க்கையின் கணக்கை ஒப்புவிக்க வேண்டும் (ரோம. 14:10–12). இந்த நியாயாசனத்திலிருந்து யாரும் இழந்துபோவதில்லை. ஆனால், பலனைப்பெற்றுக்கொள்வதற்காக நியாயத்தீர்க்கப்படுகிறோம். சரியாக தங்கள் வாழ்வை வாழாதவர்கள், தங்களது பலன்களை இழக்கிறார்கள், தங்களது இட்சிப்பை அல்ல (1 கொரி. 3:11–15). தேவன் அன்பாயிருக்கிறார். அவரது நியாயத்தீர்ப்புகள் யாரை ஆக்கினைத் தீர்ப்புக்குட்படுத்துகிறார் என்பதை பார்ப்பதற்காக உண்டானதல்ல. ஆனால், அவர் பலன் அளிக்கிறதற்கானதே. ரொனால்டு பக் தேவ தூத ஊழியங்களின் அவரது வெளிப்பாட்டில், விசுவாசிகளின் நியாயத்தீர்ப்பு என்பது நித்திய நாளுக்குள்ளே ஒருவர் ஊடுருவிச் செல்வதற்கு முன்பு கடந்து செல்லும் இருட்டான இரவு அல்ல; தனது மக்களுக்கு 'நன்றி' சொல்ல தேவன் தெரிந்தெடுத்த நாளாகும் (Angels on Assignments by Ronald Buck, pages 131-144). விசுவாசிகளினுடைய நியாயத் தீர்ப்பின் நேரத்தை அநேக ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிடும் காலக்கட்டமானது, ஆகாயத்திலே எடுத்துக்கொள்ளப்படுவதற்கும் யூதர்களுக்கான கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கும் இடையில் இருப்பதாக வைத்துள்ளார்கள்; இது பரலோகத்திலே, ஆட்டுக்குட்டியானவரின் கல்யாண விருந்துடன் நடைபெறும்.

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.*

அவரது இரண்டாம் வருகையில் ஒலிவ மலையின்மேல் இறங்கின உடனே கர்த்தராகிய இயேசு, அந்திக் கிறிஸ்துவையும் தேசங்களையும் அவரது மகிமையினாலும் வல்லமையினாலும் ஏற்கனவே நியாயந்தீர்த்திருப்பார் (2 தெச. 2:8). சிங்காசனங்களையும் சிங்காசனங்களின்மேல் உட்கார்ந்திருந்தவர்களுக்கு நியாயந்தீர்க்கும்படி ஒப்புக்கொடுக்கப்பட்டதையும் அப்போஸ்தலனாகிய யோவான் பார்த்தார் (வெளி. 20:4). தேசங்களின் நியாயத்தீர்ப்பைப் பற்றி இயேசு பேசியவைகளின் பகுதிதான் இவைகள் (மத். 19:28; 25:31–46). இயேசுவின் சீஷர்கள் தங்களது மாம்ச சிந்தையிலே இந்த 'சிங்காசன–அறை' இடங்களை தவறான உள்நோக்கங்களோடு தேடினதாக காணப்படுகிறது (லூக். 22:24–30). இருபத்து நான்கு சிங்காசனங்களால் சூழ்ந்த தேவனது சிங்காசன அறையை, அப்போஸ்தலனாகிய யோவான் கண்டார். இவைகள் வித்தியாசமான யுகங்களை சேர்த்தவைகளாகவும், ஆவிக்குரிய உலக நிர்வாகத்திற்கு சேர்ந்தவைகளாகவும் இருக்கக்கூடும் (வெளி. 4:4). பூமியிலே ஒரு முறைமையாக, கிறிஸ்துவின் இந்த பூலோக ஆளுகை சிங்காசனங்களோடு உண்டாக்கப்பட்டது. இவைகளால் ஆயிரம் வருடங்களில் கிறிஸ்து ஆளுகை செய்வார்.

ஆதாமின் யுகத்திலே (ஆதாம் முதல் கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன் உள்ள கடைசி தலைமுறைவரை) பூமியின்மேல் வாழ்ந்த எல்லா மனிதர்களும், நியாயந்தீர்க்கப்பட்டு அவர்களது இரகசியங்கள் வெளிப்படுத்தப்படுகின்றன (ரோம. 2:16). ஆதாமின் இனத்தை தன்மேல் எடுத்துக்கொண்ட மனிதகுமாரனாகிய இயேசு, மனிதர்களின் சுபாவத்தை அறிந்தவராகையால், பூமி முழுவதையும் சத்தியத்தோடும் மனதுருக்கத்தோடும் நியாயந்தீர்ப்பார் (அப். 17:31). அவர் பார்வைக்கு மறைவான சிருஷ்டி ஒன்றுமில்லை. எல்லாம் அவருக்கு முன்பாக நிர்வாணமாயும் வெளியரங்கமாயுமுள்ளது. அவருக்கே எல்லாரும் கணக்கொப்புவிக்க வேண்டும் (எபி. 4:13). விசுவாசிகளின் நியாயத்தீர்ப்பானது, இயேசுவுக்கு அன்பு, தியாகம், சேவை இவைகளின் அடிப்படையில் இருக்கும் வேளையில், தேசங்களின் நியாயத்தீர்ப்பு பூமி முழுமைக்கும் மற்றும் தேவனது இரண்டு பிரமாணங்களுக்கும் ஒவ்வொரு மனிதர்களும் ஒவ்வொரு தேசமும் எவ்வாறு சேர்ந்து அமைந்திருந்தது என்பதை பொறுத்து அமையும்: அவர்கள் தேவனை எப்படி நேசித்தார்கள் மற்றும் ஒருவரை ஒருவர் எப்படி நேசித்தார்கள் என்பதே. தேசங்களை எவ்வாறு நடத்தினார்கள் மற்றும் ஜனங்கள் ஒருவரை ஒருவர் எவ்வாறு நடத்தினார்கள் என்ற அடிப்படையில் ராஜா (இயேசு) நியாயத்தீர்ப்பதின் ஒரு சிறிய தோற்றத்தை இயேசு கொடுக்கிறார் (மத். 25:31–46; ரோம. 2:13–16). இந்த பரீட்சையில் தேர்வடையாதவர்கள் நித்திய அக்கினிக்கு நியமிக்கப்படுகிறார்கள் (மத். 25:46; வெளி. 19:20; 20:10).

### *ஆயிரம் வருடம்*

ஆயிரம் வருடங்களுக்கு முன்பு மட்டும் ஏன் பிசாசு கட்டப்பட்டு, அதன் முடிவில் விடுதலையடைகிறான் என்பது ஜனங்களை ஆச்சரியத்திற்குட்படுத்தும் இரகசியங்களில் ஒன்றாகும் (வெளி. 20:4–10). மிருகத்தைபோலும் கள்ளத்தீர்க்கதரிசியைப்போலும் ஏன் அவன் அக்கினிக் கடலிலே தள்ளப்படவில்லை என்று மெய்யாகவே அநேகர் ஆச்சரியப்படுகின்றனர் (வெளி. 19:20). இந்தக் காரணங்களினால், சிலர் பின்–ஆயிரம் வருட கருத்துக்களை நோக்கி சாய்ந்துவிடுகின்றனர் (சபை யுகத்தை ஆயிரம் வருடத்தின் ஒரு பகுதியாக அமைத்துப் பார்ப்பதால்) மற்றவர்கள் ஆயிரம் வருடங்களை எழுத்தின்படி உள்ள காலமாக எண்ணாமல் வெறும் அடையாள காலமாக (ஆயிரம் வருட அரசாட்சி இல்லாத) எண்ணுகிறார்கள். ஒருவர் ஆயிரம் வருடங்களை எழுத்தின்படி வியாக்கியானம் செய்தால், அவர் பெரும்பாலும் முன்–ஆயிரம் வருட கருத்தையே எடுத்துக்கொள்பவராக இருப்பார்;

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved. 

ஏனெனில், தற்கால இருபத்தொன்றாம் நூற்றாண்டின் அனுகூல அம்சத்தில் இருந்து, அமைதியும் ஒற்றுமையும் நிறைந்த ஆயிரம் வருடங்களை, மனித வரலாற்றிலே ஒரு இடத்திலோ காலத்திலோ நாம் கண்டதில்லை.

ஆயிரம் வருடம் என்பது பூலோகத்திலே பரதீசின் நேரமாக எண்ணப்படுகிறது. அந்தக் காலத்திலே ஓனாயும் ஆட்டுக்குட்டியும் ஒருமித்து மேயும், சிங்கம் மாட்டைப்போல வைக் கோலைத் தின்னும், புழுதி சர்ப்பத்திற்கு இரையாகும். தேவனுடைய பரிசுத்த பர்வதத்திலே அவைகள் தீங்கு செய்வதுமில்லை கேடுண்டாக்குவதுமில்லை (ஏசா. 65:25). பூமியிலே பரதீசு இருந்த மற்றும் ஒரு காலம், வீழ்ச்சிக்கு முன்பிருந்த ஏதேன் தோட்டமாகும். ஆதாமும் ஏவாளும் பாவத்தில் விழாதிருந்திருந்தால் எப்படியிருக்கும் என்று அநேகர் ஆச்சரியப்படுகின்றனர் (திட்டம் A) ஏதோ ஒரு காலக்கட்டத்தில் கிறிஸ்து நிச்சயமாக தன்னை வெளிப்படுத்தியிருப்பார் என்று நான் உறுதியாக எண்ணுகிறேன்.

நாம் வேதத்தில் காணும் நிகழ்ச்சிகளிலே திட்டம் Bஆக இருந்திருக்க முடியும் (திட்டம் A முதல் திட்டம் Z மற்றும் அதற்கு மேலும் உள்ளத்தில், கிறிஸ்து ஏதாவது வழியில் தன்னை வெளிப்படுத்தியிருப்பார் என யூகிக்கலாம்). பூமிக்காக இன்னும் திரை திறக்கப்படவிருக்கும் பூர்வ திட்டம் Aவினுடைய பகுதிகள் இன்னும் வெளிப்படுத்தப்படாமலிருக்க முடியும் (ஆதாமும் ஏவாளும் வீழ்ச்சியடையாமலிருந்திருந்தால்). அவர்கள் மரிக்கும்முன்பு ஏறக்குறைய ஆயிரம் வருடம் (தொள்ளாயிரத்திற்கு மேல்) உயிரோடிருந்த முதல் தலைமுறை மனிதர்கள், ஆயிரம் வருட கீழ்ப்படிதலின் முடிவில் கிறிஸ்துவின் விசேஷ வெளிப்பாடு அவர்களுக்கு உண்டாயிருந்தது, காத்திருந்திருக்க வேண்டும் என்பதையே குறிக்கிறது (அவ்விதமே மோசேயின் காலத்திய முதல் தலைமுறையினர், நாற்பது ஆண்டுகளாக கீழ்ப்படியாதவர்களாய் இருந்ததற்கு பதிலாக, வாக்குத்தத்த தேசத்திற்குள் சென்றதை நாம் யூகிக்க முடியும் – அவர்கள் வீழ்ச்சியடைவதற்காகவே தேவன் அவர்களை உண்டாக்கினார் என்று யாரும் நினைக்கவே கூடாது – முன்தீர்மானம் என்பதைப் பற்றி அஸ்திபார சத்திய தொகுப்பு 13ஐ வாசியுங்கள்). துர்அதிஷ்டவசமாக, பூமிக்கு இயேசுவின் இரண்டாம் வருகைக்கு பிறகு வரும் ஆயிரம் வருடத்திலேதான், நாம் இந்த இரகசியத்தை கண்டுபிடிக்க இயலும்.

*பெரிய வெள்ளைச் சிங்காசன நியாயத்தீர்ப்பு: வானமும் பூமியும் அகன்று போயின*

ஆயிரம் வருடத்தின் முடிவில், பெரிய வெள்ளைச் சிங்காசனம் தோன்றும். அதன் மகிமைக்கு முன்பாக முழு பூமியும் வானம் முழுமையும் நிற்க முடியாமல் அகன்று போகும் அளவிற்கு, அது அவ்வளவு வல்லமையுள்ளதாயிருந்தது. எல்லா வானமும் எல்லா பூமியும் அந்த பெரிய வெள்ளைச் சிங்காசனத்திற்கு முன் அகன்று போயின. அறிந்த உலகம் மற்றும் பூமிக்கு மேலும் கிரகமண்டலங்களைச் சுற்றிலும் உள்ள, ஆவிக்குரிய எல்லா உலக எல்லைகள் மட்ட நிலைகளையும் இந்த வல்லமையுள்ள சிங்காசனம் பாதிக்கிறது. ஆதாம் யுகத்திற்கு முன்பே இருந்த பிசாசும் அவனது கூட்டங்களும் பூமியிலே தேவனுக்கு விரோத மாக ஊக்கமாக வேலை செய்தவர்கள் எல்லாருக்கும், ஏற்கனவே இந்த பெரிய வெள்ளைச் சிங்காசனம் தோன்றும் முன்பே அவர்களுக்குச் செய்யப்பட வேண்டியவைகள் செய்தாயிற்று (வெளி. 20:10). ஆவிக்குரிய மண்டலத்தின் இருட்டு இருப்பிடமான, மரணமும் பாதாளமும், இந்த பெரிய வெள்ளைச் சிங்காசனத்தின் கீழ் நியாயந்தீர்க்கப்பட்டு விட்டார்கள் (வெளி. 20:14).

இந்தப் பெரிய வெள்ளைச் சிங்காசன நியாயத்தீர்ப்பு என்பது இந்தப் பிரபஞ்சத்தின் (பூமியும் அதைச் சுற்றிலுமுள்ள வானங்களும்) எல்லா பகுதிகளுக்கும், ஆயிரம் வருடத்தில் வாழ்ந்த எல்லாருக்கும் வல்லமையான கணக்கு முடிக்கும் செயலாகும். ஆதாமுக்கு முந்தின மற்றும் ஆதாம் காலத்திய நாகரீகங்களும், ஒவ்வொருவர் மேலிருந்த அதன் செல்வாக்கும், அதாவது இந்த பிரபஞ்சத்தின் பகுதியிலே சேவை செய்த தேவ தூதர்கள், மனிதர்களின் செல்வாக்குகளின் கணக்கு வழக்குகள் முடிக்கப்படுவதாகும். பிரபஞ்சத்தின் இந்தப் பகுதிக்காக தேவ திட்டங்களுக்கு ஒத்துப்போவதை சார்ந்தே நியாயத்தீர்ப்பிருக்கும்.

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved. 

புத்தகங்கள் திறக்கப்பட்டன. அவைகளில் ஒன்று ஜீவ புத்தகம் (வெளி. 20:12). இந்த வல்லமையான நியாயத்தீர்ப்பு பயமுறுத்துவதைப்போலக் காணப்பட்டாலும், புத்தகங்கள் திறக்கப்படுகிறபோது அது, தேவன் தாமே இன்னும் அதிகமாக தன்னை வெளிப்படுத்துகிற ஒன்றாகும்.

இந்த பிரபஞ்சத்தின் பகுதியில் சுற்றியுள்ள வானங்கள் மற்றும் பூமியின் அஸ்திபாரம் போடப்படுவதற்கு முன்பே, அநேக காரியங்கள் முன் நியமிக்கப்பட்டிருந்தன.

1. இந்த பூமி அஸ்திபாரமிட்டதிலிருந்து இரகசியமாக வைக்கப்பட்ட காரியங்களின் வெளிப்பாடு இருக்கும் (மத். 13:35).

2. இந்த பூமி அஸ்திபாரமிட்டதிலிருந்து வைக்கப்பட்ட ஆசீர்வாதங்களும் ராஜ்யங்களும் ஆயிரம் வருடத்திற்குப் பிறகு வெளிப்படும் (மத். 25:34).

3. ஆதாமிற்கு முற்பட்ட காலத்திலிருந்து மீதியாயிருந்த பாவம் மற்றும் முரட்டாட்டத்தின் பிரமாண இரகசியமும், இந்த பூமி அஸ்திபாரமிடுவதற்கு முன்பு ஆரம்ப உருவாகுதலின் இரகசியமும், பூமியின் மேலும் அதைச் சுற்றிலுமுள்ள வானங்களிலும் உள்ளவைகள் எவ்வாறு வெளியரங்கமாக்கப்பட்டு நியாயந்தீர்க்கப்படும் என்ற (லூக். 11:50) இரகசியம் வெளிப்படும்.

4. இந்த உலகம் அஸ்திபாரமிடப்பட்டதற்கு முன்பு, கிறிஸ்துவின் மூலமாக நமக்கும் கிறிஸ்துவுக்கும் இருந்த தேவ அன்பின் இரகசியம், மகிமையின் முழு வெளிச்சத்தில் நமக்குக் காட்டப்படும் (யோவா. 17:24).

5. இந்த பூமி அஸ்திபாரமிடப்பட்டதற்கு முன்பு அடிக்கப்பட்ட தேவ ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் மூலமாக, பிரபஞ்சத்தின் இந்தப் பகுதி மற்றும் பூமியினுடைய மீட்பின் இரகசியம் அதனுடைய முழு பாவ நிவாரண பராக்கிரமத்தோடு வெளிப்படுத்தப்படும் (எபி. 9:26; 1 பேது. 1:19–20; வெளி. 13:8). இந்தப் பிரபஞ்சத்தின் இந்தப் பகுதியின் மேல், தேவ ஆட்டுக்குட்டியின் உரிமையோடு இந்த இரகசியம் சம்பந்தப்படுகிறது (வெளி. 4:1–7).

6. இந்த பூமி அஸ்திபாரப்படுமுன்னே, அவருக்கு ஒத்திருப்பதற்கு நாம் எவ்வாறு தெரிந்துகொள்ளப்பட்டோம் என்ற இரகசியமும் வெளிப்படுத்தப்படுகிறது (எபே. 1:4).

7. இந்த உலகம் அஸ்திபாரமிடப்படுவதற்கு முன்னே, எவ்வாறு நமது வேலைகள் எல்லாம் முன்–நிச்சயிக்கப்பட்டு அவரில் திட்டமிடப்பட்டது என்ற இரகசியம் வெளிப் படுத்தப்படுகிறது (சங். 139:16; எபி. 4:3; வெளி. 20:12).

இந்த பயங்கரமான தேவ வெளிப்பாட்டினால், புதிய வானமும் புதிய பூமியும் வந்து சேரும். எல்லா ஆவிக்குரிய உலகமும், எல்லா இயற்கை உலகமும், எல்லா வானமும் எல்லா பூமியும் புதிதாக்கப்படும். பெரிய வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்புக்கு பிறகு தேவனுக்கும் தேவ ஆட்டுக்குட்டிக்கும், அவரது சிருஷ்டிப்புக்கும் இடையே வல்லமையுள்ள புதிய உறவு அருளப்படுகிறது.

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.

*அத்தியாயம் 3*

# தானியேலின் தீர்க்கதரிசனங்களை விளங்கிக்கொள்ளுதல்

வெளிப்படுத்தின் விசேஷத்தையும் முடிவுகாலங்களையும் வியாக்கியானம் செய்வதற்குரிய திறவுகோலை, தானியேலின் தீர்க்கதரிசனங்கள் உடையதாய் இருக்கின்றன. கடைசி நாட்களும், கிறிஸ்துவின் காலங்கள் வரைக்கும் இருக்கிற உலகத்தின் பெரிய சாம்ராஜ்யங் களும், தானியேலுக்கு வெளிப்படுத்தப்பட்டது. மகா பெரிய உபத்திரவத்தின் கடைசி வாரத்தில் நடைபெறும் முக்கிய அம்சமான, தானியேல் தீர்க்கதரிசனமாய் சொன்ன பாழாக்கும் அருவருப்பைக் குறித்து இயேசு கிறிஸ்துதாமே குறிப்பிடுகிறார் (மத். 24:15).

*தானியேலுக்கு வெளிப்படுத்தப்பட்ட சாம்ராஜ்யங்கள்*

தானியேலுக்கு தனிப்பட்ட முறையில் வெளிப்படுத்தப்பட்ட பயங்கரமான தரிசனங்கள் மூலமாகவும், ராஜாவாகிய நேபுகாத்நேச்சாருடைய சொப்பனத்திற்கு வியாக்கியானம் சொன்னதின் மூலமாகவும், தானியேலுக்கு நான்கு சாம்ராஜ்யங்களாகிய பாபிலோனிய சாம்ராஜ்யம், மேதிய–பெர்சிய சாம்ராஜ்யம், கிரேக்க சாம்ராஜ்யம் மற்றும் ரோம சாம்ராஜ்யம் ஆகிய இவைகள் தானியேலுக்கு வெளிப்படுத்தப்பட்டன (தானி. 2:29–45; தானியேல் 7–8 அதிகாரங்கள்). அவைகளின் வெளிப்பாட்டை பின்வருமாறு கூறுகிறோம்.

| *பாபிலோனிய சாம்ராஜ்யம்* | *மேதிய–பெர்சிய சாம்ராஜ்யம்* | *கிரேக்க சாம்ராஜ்யம்* | *ரோம சாம்ராஜ்யம்* |
|---|---|---|---|
| பொன் | வெள்ளி | வெண்கலம் | இரும்பு |
| கழுகின் செட்டைகளை உடைய சிங்கம் | கரடி | சிறுத்தை (சிவங்கி) | மிருகம் |
| | செம்மறி ஆட்டுக்கடா | வெள்ளாடு | |

ரோம சாம்ராஜ்யத்திலிருந்து பத்துக் கொம்புகள் அல்லது பத்து ராஜாக்கள் எழும்புவார்கள் (தானி. 7:24). நேபுகாத்நேச்சாரின் சொப்பனத்திலிருந்த இரும்பு களிமண்ணும் கலந்த பாதத்தை (பத்து விரல்கள் உள்ள) போன்றதுதான் இந்த புத்துக் கொம்புகளுமாகும் (தானி. 2:33, 42). இந்தப் பத்து ராஜாக்களும் இரும்பைப்போல் பாதி உறுதியாகவும், களிமண்ணைப் போல பாதி பலவீனமாகவும் இருப்பார்கள். இந்தப் பத்து ராஜாக்களுக்கு முன்பு, இந்த எல்லா சாம்ராஜ்யங்களும் ஒரே ராஜா ஆளுகையின் கீழ் இருந்தன (ஒரே ஒரு விதிவிலக்காக ரோமப் பேரரசு இருந்தது. அதற்கு நிர்வாக சபை ஒன்று ஏதோ ஒரு அமைப்பில் இருந்தது. ஆனாலும், பேரரசர் ஒரு தனி ராஜாவைப்போலவே ஆளுகை செய்கிறார்). ஒரு ஜனநாயக கூட்டமைப்பின் அமைப்பு – பாதி உறுதியாக பாதி பலவீணமாக – இரும்பு களிமண் ணோடு கலக்கும் ஒப்புவமையில் மிகவும் நேர்த்தியாக சித்தரிக்கப்பட்டுள்ளது. இந்த ராஜாக்களின் காலத்தில்தான், கிறிஸ்துவின் இரண்டாம் வருகை இருக்கும் என்று ஒரு தீர்க்கதரிசனம் இருக்கிறது (தானி. 2:44–45 கைகளால் பெயர்க்கப்படாமல் மலையிலிருந்து வந்த கல்).

*அந்திக்கிறிஸ்துவின் தோற்றம்*

அவர்களுக்குப் <u>பின்பு</u> வேறொருவன் எழும்புவான் என்று காபிரியேல் தானியேலுக்கு அறிவித்தான்; இவன் மற்ற பத்து ராஜாக்களைவிட வித்தியாசமானவன் (தானி. 7:24, 25). அவன் பழைய பத்து ராஜாக்களில் மூன்றுபேரை ஜெயித்து கீழ்க்கண்டவற்றை செய்வான்:

1. உன்னதமானவருக்கு விரோதமாக பகட்டான வார்த்தைகளைப் பேசுவான்.
2. உன்னதமானவருடைய பரிசுத்தவான்களை உபத்திரவப்படுத்துவான்.
3. அவன் காலங்களையும் பிரமாணங்களையும் மாற்ற நினைப்பான்.

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.

4. ஒருகாலமும், காலங்களும், அரைக்காலமும் பரிசுத்தவான்கள் அவன் கையில் ஒப்புக் கொடுக்கப்படுவார்கள் (ஒரு காலம் என்பது எப்பொழுதுமே 360 நாட்களுள்ள தீர்க்கதரிசன வருடமாக எடுத்துக்கொள்ளப்படுகிறது, காலங்கள் 720 நாட்கள் (360X2), அரைக்காலம் 180 நாட்கள்; இவைகளையெல்லாம் கூட்டினால் 1260 நாட்கள் = 3.5 வருடங்கள்).

தானியேல் 11ஆம் அதிகாரத்தில், வடக்கு ராஜா மற்றும் தெற்கு ராஜாவைப்பற்றிய தீர்க்க தரிசனம் ஒன்று உள்ளது (தானி. 11:6). வடக்கு ராஜா(சிரியா)வுக்கும் தெற்கு ராஜா(எகிப்து) விற்கும் இடையே இருந்த போராட்டங்களின் வரலாற்று நிறைவேறுதல்கள் ஆராய்ச்சியாளர் களுக்கு மிகவும் அறிமுகமானவைகள். அன்டியோகஸ் (IV) எபிபேனஸ் மற்றும் டாலமி (I, II & III) இவர்களையும் சேர்த்து ஆராய்ச்சியாளர்கள் வடக்கு தெற்கின் பல்வேறு ராஜாக்களின் சில விவரமான தீர்க்கதரிசன நிறைவேறுதல்களைஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளார்கள். 1 மற்றும் 2 மெக்கபீஸின் யூத குறிப்பேடுகளில் இந்த வரலாற்றின் பாகங்கள் குறித்து வைக்கப்பட்டுள்ளன. அன்டியோகஸ் எபிபேனஸ் (175–164 கிபி) ஆலயத்தில் பரிசுத்த பலிபீடத்தை அசுசிப்படுத்தினான். பன்றியை பலிசெலுத்தியதோடு தொடர்ந்து அனுதின பலிகள் செலுத்தப்படுவதையும் தடைசெய்தான் (1 மெக்கபீஸ் 1:44–54).

அநேக தீர்க்கதரிசனங்களுக்கு இரட்டை நிறைவேறுதல்கள் உள்ளன – வரலாற்று மற்றும் எதிர்கால தீர்ச்சதரிசன நிறைவேறுதல். அன்டியோகஸ் எபிபேனஸ் என்பவன் அந்திக் கிறிஸ்துவுக்கு முன் அடையாளமானவன். தனது காலத்திலே இன்னும் எதிர்கால *பாழாக்கும் அருவருப்பு* நிறைவேறவில்லை என இயேசு காண்கிறார் (மத். 24:15). கிபி 70ல் ஏற்பட்ட எருசலேமின் அழிவை, சில ஆராய்ச்சியாளர்கள் மத்தேயு 24ஆம் அதிகாரத்தில் அநேக பகுதிகள் நிறைவேறினதாக காண்கின்றனர். ஆனால், இப்படிப்பட்ட தன்மையுள்ள தீர்க்கதரிசனங்களுக்கு எப்பொழுதுமே இரட்டை நிறைவேறுதல்கள் (வரலாற்று மற்றும் எதிர்காலத்தில் நடைபெறும் கடைசி காலங்களைப் பற்றிய உபதேசங்கள்) உள்ளன. தானி. 11:35–45ன் (*முடிவுகாலம்* என்று, வசனம் 35லிருந்து வருகிறது) வரலாற்று நிறைவேறுதல் களை இன்று வரை அநேக ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடிக்கவே இல்லை.

### *பத்துக் கொம்புகளின் தோற்றம்: திருத்தியமைக்கப்பட்ட ரோம சாம்ராஜ்யம்*
### *The Revised Roman Empire (RRE)*

பாபிலோன், பெர்சியா மற்றும் பண்டைய சிரியா (சிறிது வித்தியாச மான பூகோள எல்லைகளுடன் இப்போதைய நவீன தேசங்களான ஈராக், ஈரான் மற்றும் சிரியா) ஆகிய தேசங்கள் சந்தேகத்திற்கு இடமின்றி, பத்து ராஜ்யங்களின் பகுதியாக கடைசிகாலத்தில் தங்களது வேலைப்பகுதியை நிறைவேற்றும். ஐரோப்பிய யூனியனின் தோற்றமே, பத்து சாம்ராஜ்யங்களின் தோற்றத்தினுடைய ஒரே ஒரு பகுதியாகும். ஐரோப்பிய யூனியன் ஆரம்பித்தபோது, அநேக நவீன கிறிஸ்தவர்கள் கரிசனையுள்ளவர்களானார்கள். பத்து தேசங்கள் சேர்ந்து பத்து ராஜ்யங்களாக அமையும் என்று அவர்கள் நினைத்தார்கள். ஆனால், இதோ இன்று (2008) 27 அங்க வகிக்கும் நாடுகளாக, இன்னும் அநேக நாடுகள் சேர ஆயத்தமாகவும் உள்ளன. முந்தைய முழு ரோமசாம்ராஜ்யத்தின் பெரிய படத்தை நாம் பார்க்க வேண்டுமேயன்றி, அதனுடைய வெறும் ஐரோப்பிய பகுதிகளை மட்டுமல்ல.

ரோம சாம்ராஜ்யத்தின் ஒரு பகுதியாக மத்திய கிழக்கும் உள்ளதை குறிப்பாகச் சொல்ல வேண்டும். பத்து ராஜ்யங்களின் தோற்றம் முழு பண்டைய ரோம சாம்ராஜ்யத்திலிருந்து வருமேயன்றி, ரோம சாம்ராஜ்யத்தின் ஐரோப்பிய பகுதி மட்டுமல்ல. எதிர்காலத்தில் ஒரு குறிப்பிட்ட காலக்கட்டத்தில் பண்டைய ரோம சாம்ராஜ்யத்தின் பகுதிகள், பத்து பகுதி கள் அல்லது யூனியன்களாக ஒன்று சேர தீர்மானிப்பார்கள். இப்பொழுது இது எழுதப்படும் பொழுது, பழைய மண்டலங்களை உருவாக்கிய தேசங்களின் நவீன வரைபடங்களோடு,

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved. 

பழைய ரோம சாம்ராஜ்யத்தை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, சில குழுக்கள் கூடுவதை நாம் காண முடியும்.

1. ஐரோப்பிய யூனியன் நாடுகள்.
2. ஐரோப்பிய யூனியன் அல்லாத சுயேட்சை நாடுகள்.
3. துருக்கி அல்பேனியா போன்ற ஐரோப்பிய இஸ்லாமிய நாடுகள்.
4. ரஷ்யாவும் மற்றும் அதன் கிழக்கு ஐரோப்பிய நாடுகளும் (பழைய ரோம சாம்ராஜ்யத்தின் அதிகாரப்பூர்வ பகுதியாக ரஷ்யா இல்லாவிட்டாலும், அதை நான் இங்கு சேர்த்திருப்பதன் காரணம், பழைய சாம்ராஜ்யத்தின் பகுதியாயிருந்த கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் மேல் அதற்கு உள்ள மகா பெரிய செல்வாக்காகும்).
5. ஆஃபிரிக்க சுயேட்சை நாடுகளைப்போன்ற டுனிசியா, அல்ஜீரியா மற்றும் மொராக்கா நாடுகள்.
6. முந்திய சோவியத் நாடுகளின் இஸ்லாமியக் கூட்ட நாடுகள்.
7. இஸ்லாமிய சன்னி கூட்டு நாடுகளைப் போன்ற எகிப்து, சிரியா, சவுதி அரேபியா (இதன் ஒரு சில பகுதிகள் பழைய ரோம சாம்ராஜ்யத்திலிருந்தாலும், மெக்கா அதில் இருப்பதால் இங்கு சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளது) முதலியன.
8. ஈரான், ஈராக் முதலிய இஸ்லாமிய ஷியா கூட்ட நாடுகள்.
9. இஸ்ரவேல்
10. பிரச்சனைக்குட்பட்டிருக்கும் சிறிய மாநிலங்கள் அல்லது தேசங்களைப் போன்ற பாலஸ்தீனம், காசா மற்றும் லெபனான் முதலியன.

மேற்கூறிய தளர்ந்த வகைப்படுத்துதல் மாறிக்கொண்டே இருப்பதுபோல காணப்பட்டாலும், வரும் பத்து அல்லது இருபதாண்டுகளில் காரியங்களில் மாற்றம் ஏற்படலாம். எனது பத்து தளர்ந்த வகைப்படுத்துதல்கள் எவ்வாறு பத்துக்கொம்புகளாக உருவாகும் என்பதைக் குறிக்க வேண்டிய அவசியமில்லை. (பண சம்பந்த வகையில், ஐரோப்பிய யூனியன் முக்கிய வேலைப் பகுதியை செய்து முடித்தாலும்) ஐரோப்பிய யூனியனையே தீர்க்கதரிசனத்தின் திறவுகோல் நிறைவேறுதலாக எப்பொழுதும் முக்கிய குவியமாகப்பார்ப்பதற்குப் பதிலாக, பண்டைய ரோமப் பேரரசின் பகுதிகளை, வித்தியாசமான கண்ணோட்டத்திலிருந்து புதிய நிலையில் காணும் வாய்ப்பினை செயல் உதாரணமாக காட்டவே இவ்வாறு அவைகள் செய்யப்பட்டுள்ளன. இந்தக் கூட்ட நாடுகளுக்குள்ளே, நாகரீகங்களின் மோதல்களை நாம் காண முடியும் (கிறிஸ்தவத்திற்கு எதிராக இஸ்லாம்), சன்னி பிரிவுக்கு எதிராக ஷியா பிரிவினர், முந்தைய கம்யூனிச சமுதாயங்களுக்கு எதிரான நவீன ஜனநாயக சமுதாயங்கள், யூதர்களுக்கு எதிராக இஸ்லாம் முதலியன. இந்த முக்கிய கூட்டு பெரும்பான்மை நாடுகளிலே, இஸ்லாம் அதிகமாக மேலோங்கி நிற்கிறது. இஸ்ரவேல் அதன் மூன்றாம் தேவ ஆலயத்தை சீர்திருத்தி கட்டுவதற்கு தற்சமயம் எதிராக நிற்கும் பொருள் என்று ஒன்று இருக்குமானால், அது ஒரு இஸ்லாமிய மசூதியே ஆகும் என்பதையும் கவனியுங்கள். மனித வரலாற்றை தேவன் தன் கட்டுப்பாட்டிற்குள்ளே வைத் திருக்கிறார். விசேஷமாக அதற்கு தீர்க்கதரிசன நேரம் என்று ஒன்று உள்ளது. அவரது சொந்த கால அட்டவணையின்படி, தீர்க்கதரிசனங்களின் காலந்தவறிய நிறைவேறுதல்களை தடுக்க, இந்த தீர்க்கதரிசன நேரம் பல்வேறு வகையான காரியங்களை அனுமதிக்கும்.

பண்டைய ரோம சாம்ராஜ்யத்திலிருந்து வரும் பத்து கொம்புகளை எதிர்காலத்தில் தாங்களே திருத்தியமைக்கப்பட்ட ரோம சாம்ராஜ்யமாக (Revised Roman Empire RRE) தீர்மானித்துக் கொள்வதால், மண்டல அளவில் நடைபெறும் யுத்தங்கள் (அல்லது தப்பித்துக் கொள்ளும் அரசியல் தந்திரம்) மூன்று கொம்புகளை (தானி. 7:24) அவன் மேற்கொண்டு (கீழ்ப்படுத்தி) யுத்தங்கள் (அந்திக்கிறிஸ்துவினால்தான் அதிகபெரும்பாலும் நடத்தப்படும்) நடைபெறும். இந்தப் பத்து கொம்புகள் வெளிப்படுத்தின விசேஷம் 17:12ல் உள்ள பத்துக் கொம்புகளோடு சம்பந்தப்படுத்தும்போது, அவர்கள் இருக்கும் காலம், கொஞ்சகாலம் மாத்திரமே நிலைத்திருந்தது (ஒரு தீர்க்கதரிசன மணிநேரம் – பூமி நேரத்திற்கு அது மாற்றப்படும்பொழுது அது என்ன பொருள் தந்தாலும்). வெளிப்படையாகவே, அவர்கள் மிருகத்தோடு (அந்திக் கிறிஸ்து) ஒரே சிந்தையாயிருந்து, அவனோடு ஆளுகை செய்வார்கள்.

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.

கடைசி நாட்களுக்குரிய (வடக்கு ராஜா) நிகழ்ச்சிகளிலே, முக்கிய வேலைப்பங்கு வகிப்பவர்கள் ஈராக், ஈரான், சிரியா போன்ற பகுதிகளைக் கட்டுப்படுத்துகிறவர்களாக இருப்பார்கள். அதை, தானியேல் 11:36–45ஐ அடிப்படையாகக் கொண்டு கவனிக்க வேண்டிய இன்னுமொரு காரணியாகும். எகிப்து, இஸ்ரவேல், அசீரியா இவைகளுக்கிடையில் நெடுஞ்சாலை ஒன்று இருப்பதைப் பேசும் ஏசாயா 19:23–25ல் உள்ள தீர்க்கதரிசனங்களைக் கவனிக்க வேண்டியது மூன்றாவது காரணியாகும். எகிப்து, இஸ்ரவேல், ஈராக் இவைகளை இணைக்கும் நவீன முன்னேற்றங்களை கவனிப்பவர்களாக இருப்பவர்கள், பத்து கொம்புகள் அமைக்கப்படும் குழு முன்னேற்ற உந்தத்திற்கு, இவைகளெல்லாம் பங்கு கொடுக்கும் என்பதை அறிவார்கள்.

*தானியேலின் கடைசி வாரம்: மகா உபத்திரவம்*

தீர்க்கதரிசியாகிய எரேமியாவினால் சொல்லப்பட்ட, எருசலேம் பழைய சீர்நிலைக்கு திரும்பி வருதலையும் அதன் பாழ்க்கடிப்பாகிய 70 வருட தீர்க்கதரிசனத்தைப் பற்றியும், தானியேல் ஜெபித்துக் கொண்டிருந்தார் (தானி. 9:2; எரே. 25:9–12; 29:10). எருசலேம் தேவாலயம் ஏறக்குறைய கிமு 586ல் அழிக்கப்பட்டது. ஏறக்குறைய கிமு 516ல் திரும்பக்கட்டப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்டது. எழுத்தின்படி ஒரு நிறைவேறுதல் உண்டானது. ஆனால், ஒரு கடைசிகால எதிர்கால நிறைவேறுதலும், காபிரியேல் மூலமாக தானியேலுக்கு வெளிப் படுத்தப்பட்டது (தானி. 9:24–27). இந்த வரலாற்று மற்றும் கடைசிகால இரட்டை நிறைவேறுதலும், அதிகபட்ச தீர்க்கதரிசனங்களுக்குப் பொதுவானதே. எழுபது ஆண்டுகள் 70X7 வருடங்களைக் குறிக்கும் என்று காபிரியேல் தேவதூதன் வெளிப்படுத்தினான். இந்த 490 வருட தொகையிடுதல், எருசலேமை சீர்படுத்தி திரும்ப கட்டப்படும் கட்டளையிலிருந்து ஆரம்பமாகும். கொடுக்கப்பட்ட மூன்று கட்டளைகள் இருந்தன:

1. தேவாலயத்தை புதுப்பிக்க கிமு 586ல் கோரேஸ்
2. கோரேஸின் உத்திரவை திரும்ப உறுதிசெய்யும் கிமு 519ல் தரியு
3. எருசலேமிலிருந்த தேவனுக்கு ஒரு தேவாலயத்தைக் கட்ட கிமு 457ல் அர்தசஷ்டா (சில ஆராய்ச்சியாளர்கள் இந்த நாட்கள் கிமு 456 – கிமு 458 என் அபிப்பிராயப்படுகின்றனர்).
4. கிமு 447ல் அர்த்தசஷ்டா பட்டணத்தையும் அலங்கத்தையும் கட்ட (சில ஆராய்ச்சி யாளர்கள் கிமு 446 – கிமு 448 ஆக இருக்குமென அபிப்பிராயப்படுகின்றனர்).

ராஜாவாகிய அர்தசஷ்டாவின் ஏறக்குறைய ஏழாம் ஆண்டில் (சுமார் 457 கிமு) (எஸ்றா 7:6–8, 26) எஸ்றா அர்தசஷ்டாவின் உத்திரவுப்படி, திரும்பக்கட்டும் வேலையை செய்தார். மேசியா சங்கரிக்கப்படும் நாள் வரைக்கும் (தானி. 9:25–26) ஏழுவாரமும் அறுபத்திரண்டு வாரமும் (69X7=483 வருடங்கள்) செல்லும் என்று தீர்க்கதரிசனம் சொல்லுகிறது. இது சிலுவையிலறையப்படும் நாளை கிபி 27ஆகக் காட்டுகிறது. அப்படியென்றால், கிறிஸ்து முன்பாகவே சுமார் கிமு 7ல் பிறப்பார் அல்லது எந்தக்காலத்திலிருந்து கணக்கிடப்படுகிறது என்பதைப் பொறுத்து, பின்னால் பிறப்பார் என்றாகிறது (ஜுலியன் மற்றும் கிரிகோரியன் காலண்டரிலிருந்து சிறிது மாற்றி அமைக்கப்பட்ட நமது நவீன காலண்டர் கிபி 1582லிருந்து மிகவும் துள்ளியமானதாகிறது – இருந்தாலும் வருடத்திற்கு 26 செகண்டுகள் குறைவானது. எனினும், கிறிஸ்து கிபி 1ல் பிறந்தால் எல்லாம் பார்ப்பதற்கு சரியாய் இருக்கும் என்பதற்காக, வரலாற்றைப் பிழிந்து எடுக்க முயற்சிக்கும் சிலரை நான் அறிவேன். ஆனால், நமக்குக் கிடைக்கும் தேதிகள் விநோதமானதாக இருந்தாலும், நமக்கு இருக்கும் மிகவும் துள்ளியமான வரலாற்று குறிப்புகளுக்கு விட்டுவிடுவதையே நான் விரும்புவேன்).

நாம் அனுமானிக்கும் தேதிகள் எதுவாயிருந்தாலும் (எந்த வரலாற்று குறிப்பேடுகள் மற்றும் எடுத்துக்கொண்ட வரலாற்றில் ஆரம்பிக்கும் காலம் இவைகளைச் சார்ந்து) தானியேலின் கடைசி வாரம் (கடைசி ஏழு வருடங்கள்) என்பது, சபை யுகத்திற்கு இன்னும்

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.* 

பிறகு இருக்கும் எதிர் காலத்திலுள்ளதாகும். இந்தக் கடைசி ஏழு ஆண்டுகள், மகா உபத்திரவத்தைக் குறிக்கும் (நீதிமான்கள் பாவிகளால் உபத்திரவப்படுத்தப்படும்போது இருக்கும் சாதாரண உபத்திரவத்திலிருந்து வித்தியாசப்படுத்துவதற்காக – யோவா. 16:33; அப். 14:22; ரோம. 5:3; 2 கொரி. 1:4; 2 தெச. 1:4; வெளி. 1:9 மகா உபத்திரவம் வெளி. 7:14ல் குறிப்பிடப்பட்டுள்ளது).

மகா உபத்திரவத்தின் ஏழுவருடங்கள் இரண்டு பகுதிகளாக ஒவ்வொன்றும் 3½ வருடங்களாக பிரிக்கப்படும். தெரிந்துகொள்ளப்பட்டவர்களினிமித்தமாக அந்த நாட்கள் குறைக்கப்படும் என்று இயேசு சொன்னார். அதினால், வருடத்தின் 365.25 நாட்களுக்குப் பதிலாக (மத். 24:22) மகா உபத்திரவ காலத்தின் சாதாரண தொகையிடுதல், தீர்க்கதரிசன தொகையிடுதலை பயன்படுத்தி வருடத்திற்கு 360 நாட்களாக எண்ணப்படுவதற்கும் வாய்ப்புகள் உள்ளன. நோவாவின் காலத்திலிருந்து தொகையிடுவதைச் சார்ந்து, நோவாவின் வெள்ளத்திற்கு முன்பு சூரியனைச் சுற்றி பூர்வீகமாக பூமி சுற்றி வந்ததின்படி, வருடத்திற்கு 365 நாட்களாகும் (5 மாதங்களுக்கு 150 நாட்கள் என்று கணக்கிட்டால் மாதத்திற்கு 30 நாட்கள் சமமாகும் – ஆதி. 7:11, 24; 8:3–4). நோவாவின் வெள்ளத்திற்குப் பிறகு, வருடத்தின் கால அளவு மாறினதை மனுக் குலம் உணர்ந்து, அதற்கேற்றபடி தங்களது காலண்டர்களில் மாற்றம் கொண்டுவர காலம் எடுத்தது. வருடத்திற்கு தீர்க்கதரிசன நாள் கணக்கின்படி 360 நாட்கள் என மகா உபத்திரவ காலத்தின் 3½ வருட ஒவ்வொரு பாதியையும் நாம் கணக்கிட்டால், நமக்கு 1260 நாட்கள் ஒருபகுதிக்கு வரும் (360X3.5 நாட்கள்).

வெளிப்படுத்தின விசேஷத்தில் மிருகத்திற்குக் கீழே இதே காலக் கணக்கும் வருவதால், (வெளி. 11:2–3; 12:6; 13:5–7) 1260 நாட்கள் என்ற காலக்கணக்கு மிகவும் முக்கியமானது ஆகும். இதே கால வரிசையின் நேரமானது காலம், காலங்கள், பாதிக்காலம் என்று அறியப்பட்டுள்ளது அல்லது 42 மாதங்கள் அல்லது 1260 நாட்கள் (தானி. 12:7; வெளி. 11:2; 12:14; 13:5). தானியேலின் கடைசி வாரத்தில் என்ன நடக்கும் என்பதைப் பற்றி, வெளிப் படுத்தின விசேஷத்தின் பெரும் பகுதியிலுள்ளதை, தானியேலின் புத்தகத்தை நாம் விளங்கிக் கொள்வதிலிருந்து நாம் காண முடியும். அந்திக்கிறிஸ்து எழும்புவதினால், பூமியின் மேல் தேவ கோபத்தின் பயங்கரமான செயல்பாட்டுக் காட்சியே, மகா உபத்திரவம் என்று முன்–உபத்திரவம் கருதுகிறது. தேவ கோபம், நியாயத்தீர்ப்பின் பகுதியாக, பூமியின்மேல் ஊற்றப்படும் நியாயத்தீர்ப்பு மற்றும் கோபத்திற்கு முன்னதாகவே, தேவன் திருச்சபையை ஆகாயத்திற்கு எடுத்துச்செல்கிறார் (1 தெச. 5:9; வெளி. 6:16–17; 11:18; 16:19; 19:15). பழைய ஏற்பாட்டு முன்–அடையாள இயல், வெள்ளத்திற்கு முன்பு ஏனோக்கு எடுத்துக்கொள்ளப்பட்டதிலிருக்கிறது.

மகா உபத்திரவத்தில் பின் விடப்பட்டவர்களின் கதி என்ன? தெரிந்துகொள்ளப்பட்ட வர்கள் அல்லது பரிசுத்தவான்கள் அல்லது மேசியானிய யூதர்கள், இந்த யூத யுக பகுதிக் காக தேவனது பாதுகாக்கும் திட்டத்தின் கீழ், தங்களுக்கே சொந்தமான நிர்ணயிக்கப்பட்ட பாதுகாப்பை உடையவர்களாயிருப்பார்கள். மகா உபத்திரவத்தின் – *பாழாக்கும் அருவருப் பிற்கு* பிறகு (தானி. 9:25; மத். 25:15–22; வெளி. 7:14). விசேஷமாக அதன் இரண்டாம் பகுதியில் மிகவும் அதிகமாக இரத்த சாட்சிகளும் உபத்திரவமும் இருக்கும். வெளிப்படையாக, இஸ்ரவேலைச் சுற்றிலும் வனாந்திரத்திலே அவர்களுக்காக பாதுகாப்பான ஒரு இடத்தை, தேவன் ஆயத்தம் பண்ணுவார் (மத். 24:16; வெளி. 12:14). ஏதோமின் வனாந்திரம் மற்றும் மலைகளைச் சுற்றியுள்ள பகுதிகளாக, அந்த இடத்தை சில ஆராய்ச்சியாளர்கள் அடையாளங்கண்டுள்ளனர். அங்கு ஏதோமிற்கு சம்பந்தப்பட்ட நியாயத்தீர்ப்பில், கிறிஸ்துவி னுடைய இரண்டாம் வருகையின் தீர்க்கதரிசனங்கள் உள்ளன (ஏசா. 63:1–6; தானி. 11:41).

*அத்தியாயம் 4*

# வெளிப்படுத்தின விசேஷத்தை விளங்கிக்கொள்ளுதல்

தானியேல் புத்தகத்தின் அடிப்படையான கடைசிகால சம்பவ இயலின் முன் அறிவிப்புகளை விளங்கிக்கொண்டு, மிகவும் தெளிவான வெளிச்சத்தில் நாம் இப்பொழுது வெளிப்படுத்தின விசேஷத்தைக் காண்போம். தானியேலின் கடைசிவார 1260 நாட்கள் அல்லது 3.5 வருடங்கள் அல்லது 42 மாதங்களை (காலம், காலங்கள், அரைக்காலம்) வெளிப்படுத்தின விசேஷத்தோடு ஒப்பிடும் ஒப்புமை, மகா உபத்திரவத்திலே நடைபெறும் நிகழ்ச்சிகளை, வெளிப்படுத்தின புத்தகத்திலே பயன்படுத்திய பல்வேறு அடையாளங்களோடு ஒன்று சேர்த்து நாம் சரியாக வகைப் படுத்த முடியும். வெளிப்படுத்தின விசேஷத்தின் பெரும்பாலான பகுதிகளை, மகா உபத்திரவ காலத்திலே நடைபெறுபவைகளாக அது வைக்கும். கீழே உள்ள பட்டியல் இதை விளக்க உதாரணமாக்குகிறது (முன்—ஆயிரம் வருட முன் உபத்திரவ கருத்து; ஏனெனில் மற்ற கருத்துக்கள் ஆகாயத்திற்கு எடுத்தக்கொள்ளப்படு வதை உபத்திரவ காலத்தின் மத்தியில் அல்லது உபத்திரவ காலத்தின் முடிவில் வைக்கிறது; பின் ஆயிரம் வருட கருத்திற்காக, ஆயிரம் வருடத்தை சபை யுகத்தில் வைத்துவிடுங்கள், ஆயிரவருடமில்லா கருத்தில் ஆயிரம் வருடம் காலவரிசையியலின்படி நோக்கப்படாததால், ஆயிரம் வருடத்தை வைப்பதில் எந்தப் பாதிப்பும் ஏற்படுவதில்லை):

| *விவரிப்பு* | *தானியேல்* | *வெளிப்படுத்தினவிசேஷம்* |
|---|---|---|
| சபை யுகம் | | வெளி. 1–3 |
| சபை எடுத்துக்கொள்ளப்படுதல் | | வெளி. 4–5 |
| உபத்திரவகால முதல்பாதி | தானி. 7:24 | வெளி. 6–11; 13 |
| அருவருப்பு | தானி. 9:27 | வெளி. 12 |
| இரண்டு சாட்சிகள் மற்றும் 1,44,000 பேர் எடுத்துக் கொள்ளப்படுதல் | | வெளி. 11:11–13; 14 |
| உபத்திரவ காலத்தின் இரண்டாம் பாதி | தானி. 11:36–45 | வெளி. 15–19 |
| ஆயிரம் வருடம் | | வெளி. 20 |
| புதிய வானம் புதிய பூமி | | வெளி. 21–22 |

தீர்க்கதரிசனங்கள் மற்றும் அவைகளினுடைய நிறைவேறல்களின் நமது முந்திய உரையாடல் களிலிருந்து நாம் காணும்போது, எப்பொழுதுமே இரட்டை நிறைவேறல்கள் உள்ளன (அசல் நிகழ்ச்சி களின் வரலாற்று நிறைவேறல் மற்றும் தீர்க்கதரிசனங்களின் எதிர்கால முடிவுகால இயலின் நிறைவேறல்). காலங்களின் துள்ளியமும், நடந்தவைகளை பின் நோக்கிப் பார்ப்பதும், சுலபமானதல்ல. இரண்டாவதாக, மகா உபத்திரவத்தைப் பற்றி வெளிப்படுத்தின விசேஷம் பிரதானமாக பேசினாலும், அதன் அத்தியாயங்களில் உள்ள கொள்கைகளும் வசனங்களும், நமக்குப் பொருத்தமானவைகள் அல்ல என்பது அர்த்தமல்ல. வேதாகமத்தின் எந்த பகுதியில் உள்ள எல்லா கொள்கைகளும் எல்லா சத்தியங்களும்,பழைய ஏற்பாட்டில் இருந்தாலும் அல்லது வெளிப்படுத்தின விசேஷத்தில் இருந்தாலும், அவைகளின் நேரடியான வரலாற்றுக் குறிப்புகள், கடந்த காலத்திற்கோ அல்லது எதிர்கால நிகழ்ச்சிகளுக்கோ இருந்தாலும், அவைகள் எப்பொழுதும் எல்லாக்காலத்திலும் நம் வாழ்வின் நடைமுறைக்கு பொருந்துவதாகவே உள்ளன.

### *சபை யுகம்*

வெளிப்படுத்தின விசேஷத்தின் 1–3 அதிகாரங்களில் இருக்கும் சபையுகத்தின் கால மானது, சபையைப் பற்றித் தீர்க்கதரிசனமாக பேசுகிறது. குறிப்பிடப்பட்டுள்ள ஏழு சபைகள், உண்மையான வரலாற்றுத் திருச்சபைகளாக உள்ளன. ஆனால் தேவன் யோவான் மூலமாக

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.*

சபையின் பல்வேறு நிலைகளைப்பற்றி, தீர்க்கதரிசனமாக சொல்லும் சூழ்நிலைகள் அவைகளில் உள்ளன (இரட்டை நிறைவேறுதல் – வரலாற்று மற்றும் முடிவுகால சம்பவ இயல்). எல்லா ஏழு சபைகளும் ஒன்று சேர்ந்து உண்டாக்கிய, அப்போஸ்தலனாகிய யோவானுக்கு காண்பிக்கப்பட்ட பல்வேறு வகை அம்சங்கள் உள்ள, கிறிஸ்துவின் தரிசனத்தை நாம் முதலாவது காண்போம்:

வெளிப்படுத்தின் விசேஷம் 1:10–20ல் விவரிக்கப்பட்ட இயேசுவின் முழு தரிசனமானது, அதிகாரங்கள் 2 மற்றும் 3ல் உள்ள ஏழு சபைகளுக்கான தேவ புத்திமதிகளோடு ஒப்பிடப் படுகின்றன. எல்லா சபைகளையும் ஒன்று சேர்த்துக் காண்பது, இயேசுவின் ஒரு முழு படமான அமைகிறது.

| *சபைகள்* | *விவரிப்பு* |
|---|---|
| எபேசு | ஏழு நட்சத்திரங்களை அவரது வலது கையில் ஏந்தி, ஏழு பொன் குத்து விளக்குத் தண்டுகளின் மத்தியிலே உலாவுகிறவர். |
| சிமிர்னா | ஆதியும் அந்தமுமான, மரித்து உயிரோடு எழுந்தவர் இவைகளைச் சொல்கிறார். |
| பெர்கமு | இருபுறமும் கறுக்குள்ள கூர்மையான பட்டயத்தை உடையவர். |
| தியத்தீரா | அக்கினி ஜுவாலை போன்ற கண்களையும், சுத்தமான வெண்கலம் போன்ற பாதங்களையும் உடைய மனுஷகுமாரன் இவைகளைச் சொல்லுகிறார். |
| சர்தை | தேவனுடைய ஏழு ஆவிகளையும் ஏழு நட்சத்திரங்களையும் உடையவர் இவைகளைச் சொல்லுகிறார். |
| பிலதெல்பியா | பரிசுத்தமுள்ளவரும், சத்தியமானவரும், தாவீதின் திறவுகோலை உடையவரும், ஒருவரும் பூட்டக்கூடாதபடி திறக்கிறவரும் ஒருவரும் திறக்கக்கூடாதபடி பூட்டுகிறவரும், இவைகளைச் சொல்லுகிறார். |
| லவோதிக்கேயா | ஆமென் என்பரும், உண்மையும் சத்திய சாட்சியானவரும், தேவ சிருஷ்டிப்பின் ஆரம்பமானவரும், இவைகளைச் சொல்லுகிறார். |

பிலதெல்பியா சபையைத் தவிர மற்ற எல்லா சபைகளிலும், குறிப்பான பிரச்சனைகளும் புத்திமதிகளும் கொடுக்கப்பட்டாலும், ஒவ்வொரு சபையிலும் ஜெயங்கொண்டவர்கள் இருந்தார்கள். ஜெயங்கொள்ளுகிறவர்களுக்குக் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தங்கள், இந்த வாழ்விலும் நித்தியத்திலும் ஒரு விசுவாசிக்கு இருக்கும் அதிகாரம், பலன் மற்றும் வல்லமையின் ஏழு அம்சங்களாக அமைகின்றன:

| *திருச்சபைகள்* | *ஜெயங்கொள்ளுகிறவர்களுக்கு வாக்குத்தத்தங்கள்* |
|---|---|
| எபேசு | ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனுக்குத் தேவனுடைய பரதீசின் மத்தியிலிருக்கிற ஜீவ விருட்சத்தின் கனியைப் புசிக்கக் கொடுப்பேன். |
| சிமிர்னா | ஜெயங்கொள்ளுகிறவன் இரண்டாம் மரணத்தினால் சேதப்படுவதில்லை. |
| பெர்கமு | ஜெயங்கொள்ளுகிறவனுக்கு நான் மறைவான மன்னாவைப் புசிக்கக் கொடுத்து, அவனுக்கு வெண்மையான குறிக்கல்லையும், அந்தக் கல்லின்மேல் எழுதப்பட்டதும் அதைப் பெறுகிறவனேயன்றி வேறொருவனும் அறியக்கூடாததுமாகிய புதிய நாமத்தையும் கொடுப்பேன். |
| தியத்தீரா | ஜெயங்கொண்டு முடிவுபரியந்தம் என் கிரியைகளைக் கைக்கொள்கிறவனெவனோ அவனுக்கு, நான் என் பிதாவினிடத்தில் அதிகாரம் பெற்றதுபோல, ஜாதிகள்மேல் அதிகாரம் கொடுப்பேன். |

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.

| | |
|---|---|
| சர்தை | ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனுக்கு வெண் வஸ்திரம் தரிப்பிக்கப்படும்; ஜீவ புஸ்தகத்திலிருந்து அவனுடைய நாமத்தை நான் கிறுக்கிப்போடாமல், என் பிதா முன்பாகவும் அவருடைய தூதர் முன்பாகவும் அவன் நாமத்தை அறிக்கையிடுவேன். |
| பிலதெல்பியா | ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனை என் தேவனுடைய ஆலயத்திலே தூணாக்குவேன், அதினின்று அவன் ஒருகாலும் நீங்குவதில்லை. என் தேவனுடைய நாமத்தையும் என் தேவனால் பரலோகத்திலிருந்து இறங்கி வருகிற புதிய எருசலேமாகிய என் தேவனுடைய நகரத்தின் நாமத்தையும் என் புதிய நாமத்தையும் அவன் மேல் எழுதுவேன். |
| லவோதிக்கேயா | நான் ஜெயங்கொண்டு என் பிதாவினுடைய சிங்காசனத்திலே அவரோடே கூட உட்கார்ந்ததுபோல, ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனும் என்னுடைய சிங்காசனத்தில் என்னோடே கூட உட்காரும்படி அருள்செய்வேன். |

*திருச்சபையின் ஏழு வரலாற்று நிலைகள்*

திருச்சபை அப்போஸ்தல நடபடிகளில் ஆரம்பமானதிலிருந்து கடந்து சென்ற, ஏழு பல்வேறு நிலைகளை ஏழு திருச்சபைகள் பிரதிநிதியாக்குகின்றன. இந்த நிலைகளில் சில மாற்றங்களும் மாறுதல்களும் நிதானமானவைகளே. பிரதான யூத திருச்சபையாக அப்போஸ்தலர் நடபடிகளில் ஆரம்பித்து, நிதானமாக அப்புத்தகத்தின் முடிவில் ஒரு புறஜாதி சபையாக மாறினதுபோல (யூதர்கள் கிறிஸ்துவை புறக்கணிக்கும் தீர்க்கதரிசனத்தோடு முடிவடைந்தது – அப். 28:26–28), சபை சரித்திரத்தின் இரண்டாயிரம் ஆண்டுகளை பின் நோக்கிப் பார்க்கும்போது, வெளி. 2 மற்றும் 3ஆம் அதிகாரங்களிலுள்ள ஏழு சபைகள் கடந்து சென்றதைப்போல, திருச்சபையானது கடந்து சென்ற நிலைகளை, நாம் எளிதில் துள்ளியமாக குறிப்பாகவும் சொல்ல முடியும்.

### *1. அன்பில்லாத எபேசு திருச்சபை*

வேதத்தின் 66 புத்தகங்களும் நிர்ணயிக்கப்பட்டுக்கொண்டிருந்ததால், திருச்சபையின் முதல் நிலை மிகவும் முக்கியமான நிலையாகும். ஆதித் திருச்சபை உபதேச தவறுகளுக்கு விரோதமாக போராடினது. அவர்களது உபதேசத் திருத்த குவியத்தில் அன்பை புறக்கணித்து விட்டார்கள். நீரோ மன்னன் காலத்தில் சுமார் கிபி 64ல் உபத்திரவம் ஆரம்பித்தாலும், கடைசி அப்போஸ்தலனாகிய யோவான், முதல் நூற்றாண்டின் இறுதிவரை உயிர்வாழ்ந்தார். ஆதித்திருச்சபை பிதாக்களின் எழுத்துக்களின்படி நிகொலாய் மதஸ்தர், காம வாழ்க்கையிலும், கட்டுப்படுத்தப்படாமல் இன்பங்களை அனுபவிக்கிறதிலும், விபசாரத்திலும், விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டதை புசிக்கிறதிலும், பொதுவான இன்பங்களை விரும்புகிறதிலும் வாழ்ந்தனர். எருசலேம் கவுன்சில் விலகியிருக்கும்படி சொன்னவைகளிலே அவர்கள் வாழ்ந்து வந்தனர் (அப். 15:19; 1 கொரி. 10: 6–8, 20–22).

ஆதித்திருச்சபை பிதாக்களின்படி, நிகொலாய் மதஸ்தர், இஸ்ரவேலரை மாம்ச பாவத்திற்கு பிலேயாம் வஞ்சனையால் ஈர்த்ததுபோல செய்தனர் (யூதா. 4, 11–12; 2 பேது. 2:1–2, 14–15). வெளிப்படையாகவே, அந்தியோகியவிலிருந்து மதம்மாறிய நிகொலஸ் என்ற ஒருவன், இந்த செயல்பாடுகளை ஆரம்பித்தான் (அப். 6:5). *பிலேயாம்* என்ற பெயர் *ஜனங்களை அவன் பட்சித்தான்* என்று பெருள்படும்போது, *நிகொலஸ்* என்ற பெயர் *ஜனங்களை அவன் மேற்கொள்கிறவன்* என்று பொருள்படும். ஏழு மூப்பர்களில் ஒருவனாக நிகொலஸ் ஆவியானவரில் நிரம்பினவனாக நன்றாக ஆரம்பித்திருக்க வேண்டும். ஆனால், அவனது முந்தைய புறஜாதி அஞ்ஞான வாழ்க்கை முறை, பாவத்திற்கும் தவறுகளுக்கும் அவனை

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.* 

கீழே இழுத்துத் தள்ளி இருக்க வேண்டும் (அப். 6:5). வெளியிலிருந்கும் ஓநாய்களுக்கு மட்டும் நாம் ஜாக்கிரதையாயிருப்பது மட்டுமல்லாமல், திருச்சபையின் மத்தியிலிருந்து எழும்பும் ஓநாய்களுக்கும் நாம் ஜாக்கிரதையாயிருக்க வேண்டும் (அப். 20:29–30). தங்களது ஆதி அன்பை ஆண்டவருக்காக உறுதியாக வைக்கத் தோல்வியடைந்திருந்தாலும், திருச் சபையானது நிகொலஸ் மதஸ்தரின் தவறுகளை எதிர்த்து நிற்பதில் வெற்றி பெற்றது.

## *2. உபத்திரவப்படுத்தப்பட்ட சிமிர்னா திருச்சபை*

ஆதித்திருச்சபையின் உபத்திரவம் சுமார் கிபி 64ல் ஆரம்பமாகி, சுமார் கிபி 313 வரை தொடர்ந்தது. ஆதித்திருச்சபையின் பத்து உபத்திரவ காலங்களை சில ஆராய்ச்சியாளர்கள் பின் வருமாறு வரையறுத்துள்ளனர்:

1. நீரோ (64–68 கிபி)
2. டொமிஷியன் (81–96 கிபி)
3. திராஜன் (98–117 கிபி)
4. மார்கஸ் ஆரிலியஸ் (161–180 கிபி)
5. செப்டிமஸ் செவரஸ் (193–211 கிபி)
6. மேக்ஸிமைனஸ் (235–238 கிபி)
7. டேசியஸ் (249–251 கிபி)
8. வலேரியன் (253–260 கிபி)
9. டயோகிளிடீஷியன் (284–305 கிபி)
10. கலேரியஸ் (305–311 கிபி)

அக்டோபர் 27 கிபி 312ல் கான்ஸ்டன்டைன் மிவியன் பாலம் என்ற இடத்தில் மேக்சென்டியஸை தோற்கடித்தார். தேவ உதவியை அவர் நாடினார். கிறிஸ்துவத்தின்மேல் பரிதாபம் உடையவராய் மாறினார். மிலான் நகரில் கான்ஸ்டன்டைனும் லிசினியஸும் சந்தித்து கிபி 313 மிலான் பிரகடனத்தில் கையெழுத்திட்டனர்; கிறிஸ்தவர்களுக்கும் மற்ற மதத்தினருக்கும் ஆராதிக்கும் சுதத்தரம் கிடைத்தது; கிறிஸ்தவர்களுக்கும் திருச்சபைக்கும் இருந்த எல்லா சொத்துக்களும் திரும்பக் கொடுக்கப்பட்டன. திருச்சபை ஒரு புதிய நிலைக்கு கடந்து சென்றது.

## *3. சமரசம் செய்த பெர்கமு திருச்சபை*

கான்ஸ்டன்டைன் திருச்சபையின் ஆதரவாளனானபோது, திருச்சபையானது செல்வத்திலும் அரசியல் செல்வாக்கு மற்றும் பெலத்திலும் வளர்ந்தது. விதைக்கிறவன் மற்றும் விதை என்ற உவமையில் உள்ளது போல், நேருக்கு நேர் உபத்திரவத்தின் தாக்குதலைச் சந்தித்த திருச்சபை, உலக செல்வத்தினால் பக்கவாட்டில் தாக்குதலை இப்பொழுது சந்திக்கிறது; இரண்டு தாக்குதல்களுமே அதைப் பலனற்றதாக செய்வதற்கே நோக்கமுடையதாயிருந்தன (மத். 13:21–22). கான்ஸ்டன்டைனுக்கு பிறகு வந்த அநேக ரோம பேரரசர்கள், கிறிஸ்துவத்தின் மேல் தங்கள் நம்பிக்கையை வெளிப்படையாக அறிவித்தார்கள். இவர்களுக்குக் கீழ் இப்பொழுது பழைய ரோம மதத்தின் பல தெய்வங்கள் இருந்த இடத்தில், கிறிஸ்துவம் அதிகாரப் பூர்வ மதமாக மாறினது. அநேக ரோம கட்டங்களும் ஆலயங்களும் திருச்சபையாக பயன் படுத்தப்பட்டு, திருச்சபை ஆராதனை ஆடம்பரமாகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் மாறினது. கான்ஸ்டன்டைன் தனது தலைநகரத்தை ரோமாபுரியிலிருந்து கான்ஸ்டான்டி நோபிலுக்கு மே 11 கிபி 330ல் மாற்றினான்.

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.

உலக தலைநகரமாயிருந்ததை இழந்த ரோம் நகரம், திருச்சபையின் தலைநகரமாக தீவிரமாக மாற ஆரம்பித்தது. திருச்சபையின் ஐந்து முக்கிய தலைமை பிஷப்மார்களாக செயலாற்றி வந்தவர்கள். எருசலேமிலும், அந்தியோகியாவிலும், அலெக்ஸாண்டிரியாவிலும், கான்ஸ்டான்டிநோபிலிலும், ரோமாபுரியிலும் இருந்தார்கள். அவர்கள் 'திருச்சபைப் பிதாக்கள்' என்று அழைக்கப்பட்டார்கள். ரோமாபுரியின் திருச்சபை பிதா, தனக்கு 'பாப்பா பிதா' என்ற பட்டத்தை எடுத்துக்கொண்டார். பின்னர் அது 'போப்' என மாறிவிட்டது. ரோமாபுரியின் போப்பும் கான்ஸ்டான்டினோபிலின் திருச்சபைப் பிதாவும், அதிகாரப்பூர்வ திருச்சபையின் தலைவராவதற்கு, ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக் கொண்டார்கள். கிபி 588ல் ஜான் த ஃபாஸ்டர் 'சகல திருச்சபைகளின் பிதா' என்ற பட்டத்தை தனக்குத்தானே எடுத்துக்கொண்டு, 'அகில உலக பிஷப்' ஆக தன்னை மாற்றிக் கொண்டார். இதினிமித்தம் ரோமாபுரியிலிருந்த போப் கசப்பான ஒரு போட்டியை மேற்கொண்டார். கிபி 588ல் அந்தியோகியா திருச்சபை பிதாவுக்கு எதிராக நடைபெற்ற சினாடில் 'ஆர்ச் பிஷப் மற்றும் சகல திருச்சபைகளின் பிதா' என்றும் விவரிக்கப்பட்டார்.

கிபி 606ல் போப் போனிஃபேஸ் III, என்பவர், பேரரசர் ஃபோகாஸ் என்பவரோடு இருந்த நெருக்கமான உறவினால், ஃபோகாஸிடமிருந்து ஒரு உத்தரவை நாடிப் பெற்றுக்கொண்டார். அதில் 'ஆசீர்வதிக்கப்பட்ட அப்போஸ்தலனாகிய பேதுருவின் தலைமைப் பேராலயம்தான், எல்லாத் திருச்சபைகளுக்கும் தலையாயிருக்க வேண்டும்' என்று எழுதியிருந்தது. 'அகில உலக பிஷப்' ஆக இருந்த கான்ஸ்டான்டிநோபிலின் திருச்சபைப் பிதாவினுடைய எல்லா முயற்சிகளும் மிகவும் உறுதியாக முடிவடைந்துவிட்டன, ஏனெனில் இந்தப் பதவியும் பட்டமும் ரோமாபுரியிலிருந்த போப்பிற்கு சொந்தமானதாகிவிட்டது. போப்புவின் அரசியல் வல்லமை வளர்ந்து, இத்தாலியை ஆண்ட ரோம பேரரசர்களின் இடத்தையும் எடுத்துக்கொண்டது. அதோடு அதி சீக்கிரத்தில் ராஜாக்களை முடிசூட்டும் வல்லமையையும் தனக்காக எடுத்துக்கொண்டார். கான்ஸ்டான்டிநோபிலிலிருந்த பைசன்டைன் பேரரசின் எதிரியாக டிசம்பர் 25, கிபி 800ல் போப் லியோ III சார்லேமக்னேயை முடிசூட்டினார். போப்பின் வல்லமை நிலைக்கு இவ்வாறு திருச்சபை மாற்றமடைந்துவிட்டது.

### *4. சீர் கெட்ட தியத்திரா திருச்சபை*

ஒன்பதாம் பத்தாம் நூற்றாண்டுகளில் மையமாக்கப்பட்ட மற்றும் அரசியல் ஆக்கப்பட்ட திருச்சபையில் சீர்கேடுகள் வேகமாக படர்ந்துவிட்டன. ஏப்ரல் 24 கிபி 858 முதல் 867 வரை ஆளுகை செய்த போப் நிகொலஸ் I, மேற்கு ஐரோப்பாவின் மேல் போப்பின் வல்லமையையும் செல்வாக்கையும் மிகவும் உறுதிப்படுத்திக் கொண்டார். அப்போது மேற்கு ஐரோப்பா முஸ்லீம் மற்றும் நோர்ஸ் ஆக்கிரமிப்பினால் சுற்றி வளைக்கப்பட்டிருந்தது. கிபி 897 முதல் கிபி 955 வரை (58 ஆண்டுகள்) 17 போப்புகள் இருந்தார்கள். பணத்தினால் திருச்சபைப் பதவிகளை வாங்குவது என்பது, பொதுவான காரியமாயிருந்தது. நிகொலஸ் மத கொள்கைகள் எங்கும் பரவியிருந்தன. விவாகமாகாத நிலையிலிருந்து தவறி, சில பிஷப்மார்கள் திருமணம் முடித்துக்கொண்டார்கள். மற்றவர்கள் வைப்பாட்டிகளையும் வைத்துக்கொண்டார்கள். கன்னி மடங்கள் சீர்கெட்டு விபசார விடுதிகளைப் போலாகிவிட்டன.

போப் கிரிகொரி VII மற்றும் போப் இன்னோசென்ட் ஆகியோரின் கீழ், போப்பாட்சி பதினோராம் மற்றும் பனிரெண்டாம் நூற்றாண்டுகளில் வல்லமையின் உச்சகட்டத்தை அடைந்தது. போப் போனிஃபேஸ் VIII (1294–1303 கிபி) இவருடைய ஆளுகை காலத்தில் போப்பாட்சியின் மகிமையும் வல்லமையும் சரிந்து விட்டது. படுமோசமான போப்களில் ஒருவராக ஜான் XII (955–964 கிபி) இருந்தார். அவர் ஒழுக்கங்கெட்டவராயிருந்தார். லேடரன் அரண்மனை விபசார விடுதியாகப் பேசப்பட்டது. போப் செர்கியூஸ் III (897–911 கிபி) என்பவர் மட்டுமே, இன்னொரு போப் கொலைசெய்யப்படுவதற்கான கட்டளை கொடுத்தவர்; இவர் மட்டுமே முறைதவறிப் பிறந்த மகனுக்கு தகப்பனானது மட்டுமல்ல, அந்த மகனும்

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved. 

போப்பாக மாறிவிட்டார். செர்கியூஸ் III என்பவரின் (ஆபாச ஆட்சி – வேசிகளின் ஆட்சி என்று போப்புகளின் வரலாற்று ஆசிரியர்களால் அறியப்பட்டவர்) போப்பாட்சிக் காலத்தில் தான், சீர்கெட்ட பெண்கள் போப்பாட்சியின் அதிகாரத்திற்கு வந்துவிட்டார்கள். 'வெட்கங்கெட்ட வேசி' என்று பெயர் பெற்றவள்தான் தியோடோரா என்பவள். அவளது மகள் மரோய்சா போப் ஜான் XI (931–935 கிபி) இவரது தாய். இவள் போப்பாட்சியின் மேல் அதிகாரத்தையும் செல்வாக்கையும் பயன்படுத்தினாள் (வெளி. 2:20 – வேதாகமத்திலுள்ள யேசபேலைப்போல). பனிரண்டாம் நூற்றாண்டின் சில காலங்களில் திருச்சபையானது துர் உபதேசமாக கண்டதை, அது பரவுவதிலிருந்து ஒடுக்கித் தடுக்க, கடுமையான உபத்திரவங்களை கொடுக்க, பிஷப்மார்களுக்கும் கவுன்சில்களுக்கும் உரிமை அளிக்கப்பட்டது. பதிமூன்றாம் நூற்றாண்டிலே போப்பின் பெயரிலே டொமினிக்கன் ஒழுங்கில் வந்தவர்களுக்கு, துர்உபதேச முழு ஆய்வு நடத்த போப் முழு அதிகாரத்தை கொடுத்தார். இவ்வாறு திருச்சபையில் ஒரு புதிய நிலை ஆரம்பமானது. முன்பு உபத்திரவப்படுத்தப்பட்ட திருச்சபை, இப்பொழுது களங்கமில்லாதவர்களை உபத்திரவப்படுத்தவும் கொலை செய்யவும் ஆரம்பித்தது.

### *5. செத்த திருச்சபையாகிய சர்தை*

நான்கு வித்தியாசப்பட்ட வகையான துர்–உபதேச–முழு–ஆய்வு காணப்பட்டது: மத்தியகால துர்–உபதேச–முழு–ஆய்வு (சுமார் கிபி 1184ல் ஆரம்பமானது. பிஷப்களின் துர்–உபதேச–முழு–ஆய்வு கிபி 1184–1230 மற்றும் பின்வந்த போப்பின் துர்–உபதேச–முழு–ஆய்வு கிபி 1230களில் இரண்டையும் உள்ளடக்கியது), ஸ்பானிய துர்–உபதேச–முழு–ஆய்வு (கிபி 1478ல் உருவானது), போர்ச்சுக்கீசிய துர்–உபதேச–முழு–ஆய்வு (கிபி 1536ல் உருவானது), ரோமனிய துர்–உபதேச–முழு–ஆய்வு (கிபி 1542ல் உருவானது). இதனால் அநேக பரிதாபமான களங்கமற்ற மக்கள் இறந்தார்கள். இவைகளை நடப்பித்தவர்கள் குற்றமன சாட்சியின் பாவ அறிக்கையைக் கட்டாயப்படுத்தி சொல்லவைக்க, கொடுமையான அநியாய முறைகளைப் பயன்படுத்தினார்கள். சிந்திக்கும் சுதந்தரத்தின் மேலும், சித்தம் மற்றும் தெரிந்தெடுக்கும் சுதத்தரத்தின் மேலும் திருச்சபை அதிகாரத்தைப் பயன்படுத்த முயற்சித்தது. இதில் மிகவும் பிரசித்தி பெற்ற ஒன்று, கிபி 1633ல் கலிலியோ கலிலெயின் விசாரணையாகும். இந்த மிகப்பெரிய விஞ்ஞானி இரட்டுத்தி, தன் கைகள் வேதாகமத்தின்மேல் படும்படி முகங்குப்புற விழுந்து, தனது எல்லா விஞ்ஞான கண்டுபிடிப்பு களையும் தவறானதென அறிக்கை செய்ய கட்டாயப்படுத்தப்பட்டார். வால்டென்சியன்ஸ் போன்ற குழுக்கள் நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக வேட்டையாடிக் கொலைசெய்யப் பட்டார்கள். லட்சக்கணக்கானவர்கள் ஸ்பானிய துர்–உபதேச–முழு–ஆய்வில் கொல்லப் பட்டார்கள். கோடிக்கணக்கானவர்கள் தங்கள் வீடுகளிலிருந்து துரத்திவிடப்பட்டனர்.

இந்த துர்–உபதேச–முழு–ஆய்வு கொல்லப்பட்ட பிரபல்யமானவர்கள் பின்வருமாறு:

1. ஜோஅன் ஆப் ஆர்க் (1412–1431 கிபி).
2. ஜான் ஹஸ் (1369–1415 கிபி).
3. கிரோலமோ சவோநரோலா (1452–1498 கிபி).
4. ராபர்ட் பார்நெஸ் (1495–1540 கிபி).
5. கியோர்டேனோ புரூனோ (1548–1600 கிபி).
6. பேட்ரிக் ஹேமில்டன் (1504–1528 கிபி).

துர்–உபதேச–முழு–ஆய்வின் காலம் திருச்சபை வரலாற்றில் மிகவும் கேடான அழிவின் காலமாயிருந்தது. இவைகள் ஒவ்வொரு கிறிஸ்தவனையும் வெட்கத்திற்கும் மனந்திரும்பு தலுக்கும் நடத்தவேண்டும். இவைகள் மீண்டும் எந்த அமைப்பிலும் எந்த வகையிலும் நடைபெறவே கூடாது. மார்ட்டின் லூத்தர் (1483–1546 கிபி) வார்ட்பர்க் கோட்டையில் அவரது ஆதரவாளர் ஃபிரடெரிக் III பாதுகாத்திராவிட்டால் துர்–உபதேசக்காரர் என கொலை செய்யப்பட்டிருந்திருக்க வேண்டும். சீர்திருத்தக்காலத்தின் தோற்றத்திற்குப் பிறகு, திருச்சபையானது கடைசியாக இப்படிப்பட்ட படுபாதகச் செயல்களிலிருந்து வெளியே வந்தது.

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved. 

### *6. உண்மையுள்ள திருச்சபையாகிய பிலதெல்பியா*

சேக்ஸோனி நகரில் 31 அக்டோபர் 1517ல் விட்டன் பெர்க் கோட்டை திருச்சபையின் கதவில், மார்ட்டின் லூத்தர் தனது தொண்ணூற்று ஐந்து ஆராய்ச்சிக் கட்டுரைகளை மற்றவர்கள் பார்க்கும்படியாக ஆணியடித்து வைத்ததிலிருந்து, சீர்திருத்த காலம் ஆரம்ப மானது. சீர்திருத்தத்திற்காக ஜான் விக்கிளிப், ஜான் ஹஸ் போன்றோர் லூத்தருக்கு முன்னோடிகளாக அடிப்படை வேலைகளை செய்தனர். சீர்திருத்தத்தில் ஆவிக்குரிய புதுப் பித்தல் நடைபெற்றுக்கொண்டிருந்தபொழுது, மறுமலர்ச்சி (14–17ஆம் நூற்றாண்டுகள்) மூலமாக கலாச்சார விஞ்ஞான புரட்சியும் மேற்கத்திய சமுதாயத்தில் நடைபெற்றுக்கொண்டிருந்தது. அச்சடிக்கும் அச்சகத்தின் (கூட்டன்பெர்க் 1440 கிபி) விரிவாக்கப்பட்ட உபயோகத்தின் மூலமாக, தொழில் புரட்சிக்கு வித்திடப்பட்டது. ப்ரொடெஸ்டன்ட் சீர்திருத்தம் தீவிரமாக மார்ட்டின் லூத்தர், ஜான் கால்வின் மற்றும் உல்ரிச் சுவிங்கிலி ஆகியோரால் வழி நடத்தப் பட்டது. ரோமன் கத்தோலிக்க சபையிலிருந்து கிபி 1529ல் பிரிந்துவர ஆரம்பமான இங்கிலாந்து திருச்சபை கிபி 1536ல் முழுமையான செயல், ரோமன் கத்தோலிக்க அதிகாரப் படிகளை (hierarchy) இன்னும் பலவீனப்படுத்தியது. இந்தச் சீர்திருத்தம், தொடர் மத யுத்தங்களுக்கு வழிநடத்திற்று. அதில் கடைசியான முப்பது ஆண்டு யுத்தம், கத்தோலிக்க ஹேப்ஸ்பர்க்ஸ்களுக்கும் மற்றும் ஸ்வீடன், டென்மார்க் நாடுகளின் ஆதரவுடன் ப்ரொடெஸ் டன்ட் ஜெர்மனி இளவரசர்கள் ஆகியோருக்கும் இடையே (1618–1648 கிபி) நடைபெற்றது.

1648ஆம் வருடம் மே 15 மற்றும் அக்டோபர் 24ல் வெஸ்ட்ஃபேலியா சமாதான உடன் படிக்கை கையெழுத்தானது. அது பரிசுத்த ரோம பேரரசர், ஃபெர்டினான்டு III (ஹேப்ஸ்பர்க்), ஸ்பெயின் ராஜ்யங்கள், பிரான்சு ஆகியவரோடு ஸ்வீடன், த டட்ஜ் குடியரசு, பரிசுத்த ரோம சாம்ராஜ்யத்தின் இளவரசருக்கு சம்பந்தப்பட்ட நேச நாடுகள் கையெழுத்திட்டன. ஆக்ஸ்பர்க் சமாதானத்தை அது அங்கீகரித்தது. இதன்படி ஒவ்வொரு இளவரசருக்கும் தங்களது நாட்டின் மதத்தைத் தீர்மானித்துக்கொள்ளும் உரிமை வந்தது (அந்த நாட்களில் லூத்தரினிசம், கத்தோலிசிசம், மற்றும் கால்வினிசம்). இது இளவரசர்களின் நாடுகளில் வசித்த கிறிஸ்தவர்களுக்கு, அவர்களது சபைப்பிரிவு நிலைநிறுத்தப்பட்ட சபையாயில்லா விட்டாலும், குறிப்பிடப்பட்ட மணி நேரங்களில் பகிரங்கமாக தங்களது விசுவாசத்தை அப்பியாசிக்கும் உரிமையையும், தனிப்பட்ட முறையில் தங்களது விருப்பப்படியும் செய்ய உரிமை உத்திரவாதமளிக்கப்பட்டது. இந்த உடன்படிக்கை எல்லா ஐரோப்பாவிலும் போப்பின் அதிகாரத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தது.

### *7. அனலுமின்றி குளிருமின்றி இருந்த திருச்சபையாகிய லவோதிக்கேயா*

சீர்திருத்த காலம், தொடர்ந்து வந்த அநேக ஆவிக்குரிய எழுப்புதல்களுக்கு வழிவகுத் தது. ஆர்வமின்மை, உலகத்தன்மை, அவிசுவாசம், ஆவிக்குரிய தன்மைக்கு ஜனங்களின் குளிர்நிலை ஆகிய இவைகளுக்கு, நேர்மறையான பிரதிகிரியைகளின் விளைவே, அநேக ஆவிக் குரிய எழுப்புதல்கள் ஆகும். முதலாவது மகா விழிப்புணர்வு (1730–1760 கிபி) இரண்டாவது மகா விழிப்புணர்வு (1800–1830 கிபி) தங்களது காலத்திய சமுதாயங்களுக்கு புதுப்பித்தலை கொண்டுவந்தது. அதிலிருந்து அநேக மற்ற எழுப்புதல்கள், காலாகாலமாய் தற்சமயம் வரைக்கும் வந்து கொண்டே இருக்கிறது. எனினும் 20ஆம் நூற்றாண்டு பெந்தெகொஸ்தே எழுப்புதலோடு, மற்ற எல்லா எழுப்புதல்களின் மத்தியிலும், அனலானவர் களாலும், குளிரானவர்களாலும், அனலுமின்றி குளிருமின்றி வெதுவெதுப்பானவர்களாலும், இந்த உலகம் பிரிந்துள்ளது.

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.

வரலாற்றிலே முன் ஒரு காலத்திலும் இல்லாத அளவுக்கு, மிகவும் அதிகமான செல்வத்தை, தேசங்களும், பலதேச கம்பெனிகளும், தனிநபர்களும், கையாளுகின்றனர். திருச்சபையும் பல்வேறு ஊழியங்களும், நவீன உலகத்தின் செழிப்பை அதிக அளவில் பயன்படுத்துகின்றன. எனினும், உலகமும் அநேக சமுதாயங்களும், ஆவிக்குரிய நிலையில் ஏழைகளாயிருக்கின்றனர்; சமுதாயங்களின் ஆவிக்குரிய வளர்ச்சியானது, அறிவு வளர்ச்சி யின் விஞ்ஞான தொழில்நுட்ப வேகத்தோடு, சரியாக ஈடுகொடுக்க முடியவில்லை. மனித இனத்தின் ஆவி, ஆத்துமா, சரீரங்களுக்கிடையேயுள்ள சமச்சீர் குறைவானது, ஒரு குறிப் பிட்ட இடத்தில் வழிவிட்டே ஆக வேண்டும். ஆவியானவரின் கூப்பிடுதலுக்கு விட்டுக் கொடுக்கும் ஒவ்வொருவருக்கும், எரியும் தீயை கொழுந்துவிட்டு எரியச் செய்ய, எழுப்புதல் கள் இங்குமங்கும் தொடர்ந்து வெடித்துக்கிளம்பும். ஆனால், தெரிந்தெடுக்கும் சுதந்தரம் மற்றும் உலகப்பொருள் சம்பந்தமான தத்துவங்கள், அநேகரை குளிர்ந்த நிலையில் வைக் கிறது. இரண்டிற்கும் இடையில் மாட்டிக்கொண்டு பெரும்பாலானோர், வெதுவெதுப்பான நிலையிலேயே தங்கிவருகின்றனர் (வெளி. 3:15–16 *குளிருமின்றி அனலுமின்றி என்று இயேசு மூன்று முறை குறிப்பிட்டுள்ளார்).*

அந்தோ, முடிவுகாலங்கள் அவர்கள்மேல் வரும்போது, அநேகருடைய இருதயங்கள் குளிர்ந்து தணிந்துபோகும் (மத். 24:12). நோவாவின் காலத்தில் இருந்ததுபோல, முடிவு சமீபமாக வந்தாலும், ஜனங்களின் வாழ்வு சாதாரணமாகவே இருக்கும்; நோவா பேழைக்குள் பிரவேசிக்கும் நாள்வரைக்கும், அவர்கள் புசித்தும் குடித்தும், பெண் கொண்டும் பெண் கொடுத்தும் இருப்பார்கள் (மத். 24:37; லூக். 17:27). வெளிப்பிரகாரமாக அநேகர் செல் வந்தர்களாகவும் ஒன்றும் தேவைப்படாதவர்களைப் போலவும் காணப்பட்டாலும், ஆவிக்குரிய நிலையில் பரிதாபமானவர்களும், நிர்ப்பாக்கியமுள்ளவர்களும், ஏழைகளும், குருடரும், நிர்வாணிகளுமாய் இருக்கிறார்கள் (வெளி. 3:17). தேவனுடைய சுத்தமான வசனமாகிய விலையேறப் பெற்ற பொன்னும், அவரது பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகமும் மட்டுமே, நம்மை ஐசுவரியவான்களாக்கி, நமது ஆவிக்குரிய கண்களைத் திறக்க முடியும் (வெளி. 3:18). இந்த யுகத்தின் கடைசி எழுப்புதலானது, வசனத்தின் மற்றும் ஆவியானவரின் எழுப்புதலாயிருக்கும்.

*சபையானது ஆகாயத்திலே எடுத்துக்கொள்ளப்படுதலும் மகா உபத்திரவத்தின் முதல்பாதியும்*

வெளி. 4:1–2ல் யோவான் பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது போல, பூமியின் மேலே நியாயத்தீர்ப்புகள் விழ ஆரம்பிக்கிறதற்கு முன்பு, ஆகாயத்திலே எடுத்துக்கொள்ளப் படுதலிலே திருச்சபையும் எடுத்துக்கொள்ளப்படும் (வெளி. 4–5 அதிகாரங்கள்). வெளிப் படுத்துதல் 6ஆம் அதிகாரத்தில் வரும் ஒவ்வொன்றும் அழிவும் நியாயத்தீர்ப்புகளுமே:

1. ஏழு முத்திரைகளானது, யுத்தங்களையும், மோதல்களையும், பஞ்சத்தையும், வாதைகளையும், உபத்திரவத்தையும், பூமியின்மேல் இரத்த சாட்சிகளையும் விடுவித்தது (வெளி. 6–7 அதிகாரங்கள்) வெளி. 6:2ல் உள்ள வெள்ளைக் குதிரை கிறிஸ்து அல்ல, ஆனால் அந்திக் கிறிஸ்து, மகா உபத்திரவத்தின் முதல் பாதியின் காலத்திலே ஜெயங்கொள்ள முன்னோக்கிச் செல்வதாகும். அவன் விழிக்கையிலே எல்லாவகையான பஞ்சங்களும், மரணமும், பேரிடர்களும் உண்டாகும். சிவப்புக் குதிரையானது பூமியின்மேல் யுத்தம் விடுவிக்கப்படுகிறதைக் குறிக்கும்; கருப்புக் குதிரை, பஞ்சம்; மங்கின நிறமுள்ள குதிரை, மரணம்; உபத்திரவத்தின் முதல் பாதி யிலே ஆயிரக்கணக்கான இரத்த சாட்சிகள் மரிக்கிறர்கள். ஆனால், தேவன் 1,44,000 பேரை, 3.5 வருடங்கள் தீர்க்கதரிசனம் சொன்ன வெளி. 11 அதிகாரத்தில் உள்ள இரண்டு முக்கிய சாட்சிகளோடு கூட, சாட்சிகளாக இருக்கும்படி பாதுகாக்கிறார்.

   சமுத்திரத்திலிருந்து வந்த மிருகமும் (வெளி. 13:1–10 *அந்திக்கிறிஸ்து*) கள்ளத்தீர்க்க தரிசியும் (வெளி. 13:11–18 *பூமியிலிருந்து வந்த மிருகம்)* ஒன்று சேர்ந்து வேலை செய்கிறார்கள்; அந்திக்கிறிஸ்து அநேக இரத்த சாட்சிகளைக் கொலை செய்கிறான்

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved. 

(வெளி. 13:5—7) கள்ளத்தீர்க்கதரிசி முழு உலகத்தையும் வஞ்சிக்கிறான். அந்திக் கிறிஸ்துவின் அடையாளத் தின் மூலமாக எல்லா பண பரிவர்த்தனைகளையும் கட்டுப் பாட்டிற்குள் வைத்துக்கொள்கிறான்.

2. ஏழு எக்காளங்கள் இன்னும் அதிகமான இயற்கை மற்றும் பிரபஞ்ச பேரிடர்களைக் கொண்டு வரும் (வெளி. 8—11 அதிகாரங்கள்).
முதல் நான்கு எக்காளங்கள் இப்பிரபஞ்ச பேரிடர்களை பூமியின்மேல் கொண்டு வந்தன. ஐந்தாம் ஆறாம் எக்காளங்கள், இருளான பகுதியில் பூட்டிவைக்கப்பட்டிருந்த பிசாசின் சேனைகளை விடுவித்தன (பாதாள குழியும் விழுந்துபோன தூதர்களும், ஆதாமுக்கு முந்தின காலத்திலிருந்து இந்த உலகத்தை அழிக்காதபடி பிடித்து வைக்கப்பட்டிருந்தார்கள்) ஆனால், இப்பொழுது அந்திக்கிறிஸ்துவும் இருளும் கொஞ்சகாலத்திற்கு முழு உலகத்தை யும் ஆளுவதால் பூமியின் மேலே தாராளமாய் ஆளுகை கொண்டார்கள்.

இரண்டு சாட்சிகள் (பெரும்பாலும் எலியாவும் ஏனோக்கும்; தங்களது தீர்க்கதரிசன வேலைகள் குறிப்பிடப்பட்டிருப்பதால் எலியாவும் மோசேயும் என்று சிலர் நம்பினாலும் — *மழையின் மேல் வல்லமை மற்றும் தண்ணீரை இரத்தமாக மாற்றும் வல்லமை* — வெளி. 11:6; *மறுரூப மலையின்மேல் எலியாவும் மோசேயும் தோற்றம்* — மத். 17:3; *மற்றும் மோசே யின் பாடல்பாடப்பட்டது* — வெளி. 15:3) தங்களுக்கு முன்பாக உபத்திரவ கால, மற்ற இரத்த சாட்சிகள் மரித்ததுபோல, இவர்களும் அனுமதிக்கப் பட்டார்கள் (தானி. 9:25; வெளி. 13:7) தங்களது இரத்த சாட்சிகளுக்கு முன்பாக 3.5 வருடங்கள் நிறைவு செய்கிறார்கள்.

மூன்றரை நாட்களுக்குப் பிறகு அவர்களது உயிர்த்தெழுதலும் மற்றும் எடுத்துக் கொள்ளப்படுதலும் இரண்டாம் ஆபத்தை நிறைவுக்குள் கொண்டு வந்தது (வெளி. 11:4). இந்த மூன்று ஆபத்துக்களும், ஆதாமுக்கு முந்தின காலத்திலிருந்து தடுத்துவைக்கப்பட்டிருந்த, தீய ஆவிக்குரிய இருளான சேனைகள் விடுதலை யடைவதை சம்பந்தப்படுத்தியதே. ஆனால், மகா உபத்திரவத்தின் முதல் பாதியிலே, விடுதலை அடையும்படி அனுமதிக்கப்பட்டன. முதலாம் ஆபத்து என்பது, அபடான் அவர்கள் தலைவனாக இருக்க, பாதாளத்திலிருந்து வந்த பிசாசின் ஆவிகள். இரண்டாம் ஆபத்து என்பது, ஆதாமுக்கு முந்தின காலத்திலிருந்து, கட்டப்பட்ட வீழ்ச்சியடைந்த நான்கு தூதர்கள் விடுவிக்கப்படுதல். அவர்கள், எல்லா உலகத்தையும் அழிக்க, உறுதியான தீர்மானமாய் சென்றார்கள். மூன்றாவதும் கடைசியானதுமான ஆபத்து என்பது, பரலோக மண்டலத்திலிருந்து சாத்தான் பௌதீக பூமியில் அடங்கியிருக்க தள்ளப்படுவது. இது நடைபெறும்போது அவன் செய்வதறியாது திகைக்கிறான். அவன் பூமிக்கு இறங்கிவருவது, பாழாக்கும் அருவருப்பு நடைபெறும் உபத்திரவகாலத்தின் மத்திய பகுதியோடு ஒன்று சேர்ந்து நடைபெறும்.

*பாழாக்கும் அருவருப்பு*

சாத்தான் தான் பூமியிலே கீழே தாழ தள்ளப்பட்டதை கண்டபோது, ஆண் பிள்ளையோடு இருந்த ஸ்திரியை உபத்திரவப்படுத்தினது (வெளி. 12:13). அந்த ஸ்திரி (இஸ்ரவேலுக்கு பிரதிநிதியாக) உபத்திரவத்தின் இரண்டாம் பாதி முழுவதற்கும் தேவனால் பாதுகாக்கப் பட்டாள். அவளை உபத்திரவப்படுத்த முடியாமல் போனபோது மூர்க்கமடைந்து, வனாந்திரத்தில் அடைக்கலம் பெற்றுக்கொள்ளாத எல்லா யூதர்களுக்கு எதிராகவும் அவன் யுத்தம் செய்தான். அந்த இரண்டு சாட்சிகள் மற்றும் 1,44,000 பேர் மூலமாக, அந்த காலத் திலே இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷம், இஸ்ரவேலுக்கு வெற்றிகரமாக பிரசங்கிக்கப் பட்டிருக்கும். உண்மையாக தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் அவரைத் தங்கள் மேசியாவாகவும்

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.

இரட்சகராகவும் ஏற்றுக்கொண்டவர்கள்; இவ்வாறு அவர்கள்மேல் அவரது பாதுகாப்பின் கிருபையை அடைந்துகொண்டார்கள் (வெளி. 12:17).

பிசாசு பூமிக்குத் தள்ளப்படுவதற்குச் சற்று முன்பு, இரண்டு சாட்சிகளும், 1,44,000 பேரும் சாத்தானுக்கும் மிகாவேலுக்கும் இடையே நடைபெறும் யுத்தத்திற்குச் சற்று முன்பு, ஆகாயத்திலே எடுத்துக்கொள்ளப்பட்டார்கள் (வெளி. 11:11–13; வெளி. 14ஆம் அதிகாரம்). வெளி. 14ஆம் அதிகாரத்தில் 1,44,000 பேர், இயேசுவின் பிரசன்னத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, அங்கு தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பாக ஆராதித்தார்கள் என நாம் காண்கிறோம் (வெளி. 14:1–4).

*மகா உபத்திரவத்தின் இரண்டாவது பாதி*

மகா உபத்திரவ காலத்தின் இரண்டாம் பாதியிலே, இந்த கிரகப் பூமியின் கால நிறைவேறுதல் வந்துவிட்டது (வெளி. 14:14–20). ஏழு கலசங்கள் (வெளி. 15–16 அதிகாரங்கள்) பூமி முழுவதும் முற்றிலும் நிர்மூலமாக்கப்படுதல்; ஜீவசுவாசமுள்ள எல்லாம் மரித்துப்போய்விட்டன. (நோவாவின் வெள்ளத்திலும் இப்படி நடக்கவில்லை) சூரியன் தன் நிலையிலிருந்து தடுமாறி, பூமியை தகித்தது, எல்லா பூமியும் சமுத்திரமும் ஆறுகளும் காற்றும் அழிக்கப்பட்டன. இரகசிய பாபிலோன் அது தனது உயரிய நிலையிலே, பூமியிலுள்ள பேரரசுகளின் பிரதிநிதியாக வெளிப்பட்டது. இரகசிய பாபிலோனை சிலர் ஒரு நிறுவனத்திற்கோ அல்லது நாட்டிற்கோ மட்டுப்படுத்துகின்றனர். ஆனால், ஆதி. 11ஆம் ஆதிகாரத்திலிருந்து பாபிலோன் என்பது எப்பொழுதுமே தேவனுக்கு எதிரான மனிதனின் முரட்டாட்டத்தின் ஒட்டுமொத்தத்தை காண்பிக்கிறது. எல்லா பேரரசுகளும், மனித அரசியல் ஆளுகைகளும் இந்த பாபிலோனிய ஆவி பாய்ந்து வெளியே வருவதேயாகும். சந்தேகத்திற் கிடமின்றி அநேக தீய தேசங்களும், நிறுவனங்களும் அதே பாபிலோனிய ஆவியை உடையதாயிருக்கும் என்று சொல்ல முடியும்.

அந்த ஸ்திரி சிறப்பான மனித தீமையின் முடிவையும், அந்திக்கிறிஸ்தவின் பேரரசில் முரட்டாட்டம் உருவகப்படுத்தப்பட்டதையும் குறிப்பிடுகிறாள். அவள் உட்கார்ந்திருக்கும் மிருகம் அந்திக்கிறிஸ்துவின் ஆவியை குறிக்கிறது. கடைசிகால அந்திக்கிறிஸ்துவின் ஆவி, அந்த ஆவியின் எல்லா முழு உருவகமாகும். அவனே மிருகம், இருந்ததும் இராமற் போனதும் இனி இருப்பதுமாயிருக்கிற மிருகம் அதுவே. அது பாதாளத்திலிருந்து ஏறிவரும் (வெளி. 17:8). அந்த ஏழு ராஜாக்கள், இவர்களில் ஐந்துபேர் விழுந்தார்கள், ஒருவன் இருக்கிறான், மற்றவன் இன்னும் வரவில்லை என்பது பல்வேறு ராஜ்யங்களைக் குறிக்கும்: எகிப்திய சாம்ராஜ்யம், அசீரிய சாம்ராஜ்யம், பாபிலோனிய சாம்ராஜ்யம், மேதிய பெர்சிய சாம் ராஜ்யம், விழுந்துபோன கிரேக்க சாம்ராஜ்யம், ரோம சாம்ராஜ்யம், அது யோவான் இந்த வெளிப்படுத்தின விசேஷத்தை பெற்றுக்கொள்ளும் சமயத்தில் இன்னும் இருந்து கொண்டி ருந்தது. மற்றும் எதிர்கால திருத்தியமைக்கப்பட்ட ரோம சாம்ராஜ்யம் இன்னும் வரவேண்டி யுள்ளது (வெளி. 17:10).

மிருகம் அது எட்டாவதாய் இருந்தது, ஏழாவதாயிருந்தது மூன்று சாம்ராஜ்யங்களின் மேல் அந்திக்கிறிஸ்து மேற்கொள்வதை குறிக்கிறது (தானி. 7:24 உள்ள சிறிய கொம்பு). தனது வெற்றியே பத்துக் கொம்புகளை ஏழுகொம்புகளாக குறைத்திருக்க வேண்டும். மீதமுள்ள கொம்புகளோடு சேர்த்து அமைத்ததுதான் எட்டவது சாம்ராஜ்யம்; எனினும் ஏழாவதின் பகுதி யாகவே அது இருக்கும் (வெளி. 17:11). அப்போஸ்தலனாகிய யோவான் எழுதும்போது, பத்து ராஜ்யங்கள் இன்னும் உருவாகாமலிருந்தன (வெளி. 17:12). இந்த புத்தகத்தை எழுதும்

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved. 

நேரத்தில் (அஸ்திபார தொடர் சத்தியங்களின் தொகுப்பு 14) பழைய ரோம சாம்ராஜ்யத்தின் பூகோளபகுதியை, பத்து துள்ளியமில்லாத பகுதிகளாக பிரிப்பதற்கு, தீர்மானம் எடுப்பதற்கான சில அறிகுறிகள் உள்ளன.

மகா உபத்திரவத்தின் முடிவானது, ஒட்டுமொத்த முழுமையான எல்லா ராஜ்யங்கள், ஆளுகை மற்றும் மனித ஆட்சியின் முழு வீழ்ச்சியால் குறிப்பிட்டுக் காட்டப்படுகிறது – பாபிலோனின் வீழ்ச்சி மற்றும் அது குறிப்பிடும் எல்லா காரியங்களும் (வெளி. 18–19 அதிகாரங்கள்), முழு உலகத்தையும் நியாயந்தீர்க்க ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் வருகை (வெளி 19:11–21).

*ஆயிரம் வருட அரசாட்சியும் புதிய வானமும் புதிய பூமியும்*

இந்த பூமிக்கு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையை தொடர்ந்து, ஆயிரம் வருட அரசாட்சி இருக்கும் (வெளி. 20 ஆம் அதிகாரம்). அதைத் தொடர்ந்து மகா வெள்ளைச் சிங்காசன நியாயத்தீர்ப்பு இருக்கும் (வெளி. 20:11). புதிய எருசலேமின் அளவு (சமாதானத்தின் பட்டிணம் எனபொருள்படும், நாம் இஸ்ரவேலிலுள்ள பூலோக எருசலேமை தவறாக எண்ணிவிடாமல் இருக்கவே, நாம் அந்தப் பட்டணத்து பெயரின் பொருளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தாக வேண்டும்) அதன் நீளம், அகலம் உயரம் பனிரெண்டு ஆயிரம் ஸ்தாதியா ஆகும். அது தோராயமாக ஒவ்வொரு பக்கத்திலும் 1500 மைல்கள் அல்லது 2414 கிலோமீட்டர்களாக இருக்கும். அதை பூகோள அளவில் வைக்கும்போது, சிட்னிக்கும் பெர்த்திற்கும் இடையே உள்ள பாதிக்கு மேற்பட்ட தூரம் உள்ள பட்டணமாய் இருக்கும் (ஆஸ்திரேலியா அல்லது அமெரிக்க ஐக்கிய நாட்டின் நீளத்தில் கடற்கரையில் இருந்து கடற்கரை வரைக்கும்). பிரபஞ்சத்தின் நமது பகுதியாக நாம் அறியும் புதிய எருசலேம் என்று அழைக்கப்படுகிற ஒரு பட்டணத்தின் அளவாகும்!

வானம் பூமியின் உருமாற்றம் என்று ஒன்று இருக்கிறது என்ற கூற்றும் கூட (முதலாவது வானமும், முதலாவது பூமியும் ஒழிந்துபோகும் – வெளி. 21:1) வானம் மற்றும் ஆவிக்குரிய உலகத்தைப்பற்றி தற்போது நமக்கு இருக்கும் எல்லா தரிசனங்களையும், புதிய வானத்திலும் புதிய பூமியிலும் நமக்காக சேமித்துவைக்கப்பட்டிருப்பவைகளின் பெரிய மகிமையோடு ஒப்பிடவே முடியாது என்பதையும் வெளிப்படையாகக் காட்டுகிறது.

நமது கர்த்தராகிய இயேசுவின் கிருபை நம் அனைவரோடும் இருப்பதாக. ஆமென்.

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.*